விலை: 60.00
பக்கங்கள் - 20

website : www.valampurii.lk
Viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி

சங்குநாதம்

சங்கு 26
ஒலி 052 வள்ளுவர் ஆண்டு 2056 தை 27 ஞாயிற்றுக்கிழமை (09.02.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829







## சட்டம் யாவருக்கும் சமனாயின் தையிட்டி விகாரையை அகற்றுக

### சிறீதரன் எம்.பி ஆவேசம்



(யாழ்ப்பாணம்)

தற்போதைய ஜனாதிபதி அநுர கூறியதைப் போன்று சட்டம் அனைவருக்கும் சமமானது என்றால்

19

## மாகாண சபைத் தேர்தல் விரைவில் கட்சிகளுடன் பேச்சு

### தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல் குறித்து அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட

19

## ஜனாதிபதியாக அநுர இருந்தாலும் முக்கிய முடிவுகள் ரில்வின் சில்வாவிடம்

### அடித்துக்கூறுகிறார் உதய கம்மன்பில



(கொழும்பு) நாட்டின் முக்கிய தீர்மானங்களை ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மேற்கொள்வதாக பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில குற்றம் சாட்டியுள்ளார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

## கடவுச்சீட்டு அலுவலகம் விரைவில் யாழ்ப்பாணத்தில்

(கொழும்பு)

கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்வதில் வடக்கு மக்கள் முகம்கொடுக்கும் இன்னல்களுக்குத் தீர்வு காணும்பொருட்டு குடிவரவு-குடியகல்வுத் திணைக்களத்தின் கிளையினை யாழ்ப்

19

## வடக்கு - கிழக்கிற்கு புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள்

### குற்றங்களைத் தடுக்க அநுர அரசு அதிரடி

(யாழ்ப்பாணம்)

தமிழர் பகுதியில் பெருகி வரும் குற்றங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் வடக்குக் கிழக்கிற்

19


இலங்கையில் முதன்முறையாக!
வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மாணவர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு!

UK மாணவர் வீசா – உங்கள் கனவை நனவாக்குங்கள்!

14.02.2025 - 17.02.2025
No. 158, Hospital Road, Jaffna

- 100% இலவச நிதி ஆதார சேவை (100% Free Show Money)
- 100% இலவச சேவை (100% Free Student Visa Service)
- க.பொ.த (O/L) ஆங்கிலத்தில் C சித்தி போதுமானது (IELTS Waivers)
- £10,000 வரையிலான பல்கலைக்கழக உதவித்தொகை! (Scholarships)

UK-க்கு மாணவர் வீசாவில் உங்கள் குடும்பத்தையும் IELTS & Proposal இல்லாமல் அழைத்துச் செல்லலாம்!




DREAM DESTINATION
Your Travel Partner

077 129 2638 / 076 822 2022 / 021 222 2893

(3354)


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
## நயினாதீவு

**கும்பாபிஷேக தினம் - 10.02.2025**

**தைப்பூசம் - 11.02.2025**


நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலில் “கும்பாபிஷேக தினம்” 10.02.2025 ஆம் திகதி திங்கட்கிழமையும் “தைப்பூச விழா” 11.02.2025ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் இடம்பெறவுள்ளது.

### கும்பாபிஷேக தினம் (10.02.2025)

- காலை 8.00 மணி - 1008 சங்காபிஷேகம்(மூல மூர்த்தி அம்பாள்) 108 சங்காபிஷேகம் (எழுந்தருளி அம்பாள் உருத்திரம் (ஏனைய பரிவார மூர்த்தங்கள்)
- நண்பகல் 12.00 மணி - உச்சிக்காலப் பூசை
- பி.ப 12.15 மணி - விசேட வசந்த மண்டப பூசை
- பி.ப 01.00 மணி - அம்பாள் வீதியுலா வருதல்

### தைப்பூசம் (11.02.2025)

- மு.ப 9.30 மணி
  - 108 சங்காபிஷேகம்
- நண்பகல் 12.00 மணிக்கு
  - உச்சிக்காலப் பூசை
- பி.ப 12.15 மணிக்கு
  - விசேட வசந்த மண்டப பூசை
- பி.ப 01.00 மணிக்கு
  - அம்பாள் அழகிய திருமஞ்சத்தில் வீதியுலா வருதல்



கும்பாபிஷேக தினம் மற்றும் தைப்பூச விழா என்பன சிறப்பாக நடைபெறும் என்பதனை அடியார்களுக்கு அறியத்தருகின்றேன்.

அறங்காவலர் சபை,
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு

(C-2224)

# மணிவிழா வாழ்த்துக்கள்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பௌதிகவியல் பேராசான் 09.02.2025 அன்று மணிவிழாக் காணும்,



## திரு. கணேசன் சிவலிங்கம்

{ BSc(spl), PGDE [SLTS - 1] }

தன்கடமை தாம் புரிய தடுமாறி நின்றிட்ட அன்புடையோர் அனைவருமே அணிதிரண்டோம் உமது நின்பணியை நீர் புரிந்தால் நிந்தனைகள் தேவையில்லை என்றுணர்ந்து உரைத்திட்ட உம்மொழியே பொன்மொழியாம்
இயற்பியலின் தத்துவத்தை புகட்டியதன் விளைவாலே செயற்கரிய வித்து வத்தால் உலகாழ்வார் உம் சீடர் புகழ்தேடி அலைகின்ற புவி மாந்தர் பல பேருள் நிகழ்கால மாணவர்க்கோர் நிகரில்லா ஆரியனே!!!

**சேவை விபரம்**

- வ/ இறம்பைக்குளம் மகளிர் வித்தியாலயம் 1993.01.11 - 2002.05.30 வரை
- யா/ யாழ் மத்திய கல்லூரி 2002.06.01 - 2009.12.31 வரை
- யா/ யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 2010.01.01 - 2020.12.31 வரை
- யா/ நெல்லியடி மத்திய கல்லூரி 2021.01.01 - 2021.07.31

வாழ்த்துவோர்...
உயர்தர கணித, விஞ்ஞானப்பிரிவு ஆசிரியர்கள்.

(3345)


# பத்தாவது ஆண்டு நீங்கா நினைவுகள்

## அமரர்
## தம்பு நடராஜா (JP)
(இளைப்பாறிய அதிபர்)

பத்து ஆண்டுகள் கடந்து போயின
பத்து நிமிடங்கள் போல் உங்கள் நினைவுகள்
எம் மனதில் நின்று நிலைத்திட்டது அப்பா
கல்வி, ஒழுக்கம், பண்பு பேணி எமை வளர்த்தீர்
கிழக்கில் உதயம் காட்ட ஒரு விடி வெள்ளி போல்
உங்கள் வழியிலே சிறந்த பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் கண்டீர்
சிறந்த அதிபராகவும் சிறந்த சமூகப் பணியாளராகவும் திகழ்ந்தீர்
“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்” என்பதற்கிணங்க
தெய்வமாக இருந்து என்றும் எமை வழி நடத்த
இறையருள் வேண்டி நிற்கின்றோம்.

“எமக்கு வரமாக வந்த தந்தையே
உங்கள் வழி வாழ எமக்குத் துணை நீங்களே”

என்றும் உங்கள் நினைவுடன்
பிள்ளைகள்



தோற்றம் 03.04.1932

மறைவு 28.02.2015

(3349)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை விரும்பாத தமிழ் – முஸ்லிம் தலைவர்கள் உள்ளனர்

## இதனாலேயே தீர்வு எட்டப்படவில்லை



## ஐ.ம.சக்தி எம்.பி விதானகே காட்டம்

**(கொழும்பு) ஒரு சில தமிழ் மற்றும் முஸ்லிம் தலைவர்கள் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை விரும்பவில்லை. மாறாக அவர்கள் பிரச்சினைகளை வளர்த்தெடுக்கவே பார்க்கிறார்கள். இதனால்தான் நிரந்தரத் தீர்வு கிடைக்கவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நடைபெற்ற அமர்வின்போது தோட்டங்கள் சார்ந்து காணப்படுகின்ற வீதிகளை அரசாங்கத்திற்குச் சுவீகரித்தல் குறித்து தனியாள் பிரேரணையை முன்வைத்து உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தி பெரும்பாலான பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் உள்ளார்கள்.


இவர்களின் குரல் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு அவசியம். தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை அரசியலுக்குப் பயன்படுத்துவதை இனியேனும் நிறுத்த வேண்டும்.

தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களை அரசியல் பொம்மைகளாக்கி அதனூடாக ஆட்சியைக் கைப்பற்றும் செயற்பாடுகள் மாத்திரமே இதுவரை காலமும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தமிழ் மக்களின் ஆதரவு இருந்தால் வெற்றி பெற முடியும் என்று குறிப்பிட்டுக் கொண்டு அவர்களுக்குப் பிரத்தியேகக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. அமைச்சுக்களும் ஸ்தாபிக்கப்பட்டன. ஆனால் உறுதியான தீர்வு எதுவும் கிடைக்கவில்லை.

சில தமிழ் மற்றும் முஸ்லிம் தலைவர்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதை விரும்புவதில்லை. பிரச்சினைகளை அவர்கள் வளர்த்தெடுக்கவே பார்க்கிறார்கள். இதனால்தான் நிரந்தரத் தீர்வு எட்டப்படவில்லை என்றார். (ந-7)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் கணித பாட ஆசிரியை திருமதி **சுபாஜினி பிரதீபன்** அவர்களின் பாசமிகு தந்தையார்

**அமரர் தம்பையா குணரட்ணம்**

அவர்கள் 07.02.2025 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்துவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

பிரிவால் துயருறும் :
**யாழ்.இந்து மகளிர் கல்லூரிச் சமூகம்**

(C-2231)

# பிரதேச செயலர்கள் சிலருக்கு இடமாற்றம்

(யாழப்பாணம்)

வடக்கிலுள்ள பிரதேச செயலாளர்கள் சிலருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்து என பொதுச் சேவைகள் ஆணைக்குழு அறிவித்துள் ளது.

அதன்பிரகாரம் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி முல்லைத்தீவு - கரைத்துறைப்பற்று பிரதேச செயலராகவும் கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய திருமதி உமாமகள் கரவெட்டி பிரதேச செயலராகவும் இடமாற்றப்பட்டுள்ளனர்.

இதேவேளை கரவெட்டிப் பிரதேச செயலராகக் கடமையாற்றிய தயாரூபன் ஊர்காவற்றுறை பிரதேச செயலாளராக இடம்மாற்றப்பட்டுள்ளார். (ந-7)

### யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள

# சிவஞான வைரவருக்கு நாளை மகாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் திருவருள்மிகு ஸ்ரீ சாமுண்டிகாதேவி சமேத சிவஞான வைரவர் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை 10ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.35 மணி முதல் 10.10 மணி வரையுள்ள சுபவேளையில் இடம்பெறவுள்ளது.

இன்று 9ஆம் திகதி காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை அடியார்கள் எண்ணெய்க்காப்புச் சாத்த முடியும் என ஆலய நிர்வாக சபை அறிவித்துள்ளது. (ந-7)

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
04 - 07 - 1935

மறைவு
07 - 02 - 2025

07.02.2025 அன்று இறையடி சேர்ந்த

**அமரர் தம்பித்துரை கனகசபை (J.P)**

(குமரகோட்டம், கோண்டாவில்)

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

*தகவல்:-* **நவரட்ணராசா காண்டீபன் (பெறாமகன்)**

(C-2230)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள் எழுச்சி பெற கைகோருங்கள்

## ஏற்றுமதியாளர்களுக்கு ஜனாதிபதி அழைப்பு

(கொழும்பு)

**வலுவான பொருளாதார அடித்தளத்திலிருந்து மீண்டும் எழுச்சி பெற ஏற்றுமதியாளர்களுக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அழைப்பு விடுத்துள்ளார்.**

26 ஆவது ஜனாதிபதி ஏற்றுமதி விருது வழங்கும் விழா நேற்று பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது . இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி அநுர குமார திஸா நாயக்க இதனைத் தெரிவித்தார்

மிகவும் வலுவான நிலையில் இருந்து சந்தையைக் கைப்பற்றும் சவாலை நாம் எதிர்கொள்ளாததால், வேறொரு தரப்பிலிருந்து ஆதரவைப் பெற வேண்டியிருந்தது என்பதை நினைவுபடுத்திய ஜனாதிபதி, தற்போது இருக்கும் பொருளாதார ஸ்திர நிலைமையில் இருந்து கைத்தொழில் அமைக்கப்பட்டுள்ள அடித்தளத்திலிருந்து மீண்டும் எழுச்சி பெற தனது அரசாங்கம் ஆதரவு வழங்கத் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நாடு தற்போது பொருளாதாரத்தை வலுப்படுத்தும் வேலைத்திட்டத்திற்கு கவனமாக நகர்ந்து வருவதால், பரஸ்பர புரிதலுடன் இந்தக் கடினமான தடையைத் தாண்டுவதில் கைகோர்க்குமாறு ஜனாதிபதி அநுர குமார திசா



நாயக்க இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கு அழைப்பு விடுத்தார். (6-8)

# மார்ச் மாத நடுப்பகுதியில் சகல வாகனங்களும் இறக்குமதி



(கொழும்பு)

எதிர்வரும் 25 மற்றும் 27 ஆம் திகதிகளில் இறக்குமதி செய்யப்படும் வாகனங்களைத் தாங்கிய கப்பல் ஒன்று இலங்கையை வந்தடையும் என இலங்கை வாகன இறக்கு மதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.


எதிர்வரும் மார்ச் மாதத்தின் நடுப்பகுதியில் சகல வாகனங்களும் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் என அந்த சங்கத்தின் தலைவர் பிரசாத் மானகே தெரிவித்துள்ளார்.

அத்துடன் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படும் வாகனமொன்றின் விலை 5,500,000 முதல் 6,000,000 ரூபாய்க்கு இடைப்பட்ட விலையில் காணப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த நாட்களில் வாகன இறக்குமதிக்கான கடன் கடிதங்கள் விடுவிக்கப்பட்டன.இதன்படி, எதிர்வரும் 2 அல்லது 3 வாரங்களின் பின்னர் தொடர்ச்சியாக வாகனங்களைக் கொண்டு வர முடியும்.

எனவே, அதுவரையில் முற்பணம் செலுத்தி மோசடியாளர்களிடம் ஏமாற வேண்டாம் என நுகர்வோரிடம் கோருவதாகவும் இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் பிரசாத் மானகே தெரிவித்துள்ளார். (6-8)

# தென்மராட்சி இலக்கிய அணியின் கம்பன் விழா - 2025



(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி இலக்கிய அணி முன்னெடுக்கும் கம்பன் விழா- 2025 எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு சாவகச்சேரி,தென்மராட்சிக் கலை மன்றத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் தலைமை உரையினை மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் அவர்களும் தொடக்கவுரையினை லயன். வ.ஸ்ரீபிரகாஷ் அவர்களும், அஞ்சலி உரையினை ஆசிரியர் ச.மார்க்கண்டு அவர்களும் ஆற்றவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து கம்பவாரிதி இ.ஜெயராஜ் தலைமையில் "இன்றைய அரசியல்வாதிகளுக்கு வழிகாட்ட வல்ல பெருந் தலைவன்" எனும் தொனிப் பொருளில் பட்டிமண்டபமும் இடம்பெறும்.

குறித்த நிகழ்வின் நெறியாள்கையை தென்மராட்சி இலக்கிய அணித் தலைவர் சோ.கோகுலன் ஆற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 14.11.1985 | 30.01.2025 |

அமரர்.

## சித்துராங்கி அன்ரனி (சிந்து)

ஜேர்மனியில் வசித்து வரும் தம்பதிகளான மூத்ததம்பி வீதி மானிப்பாயைச் சேர்ந்த திரு.சி.பாலச்சந்திரன், குருவீதி காங்கேசன்துறையைச் சேர்ந்த திருமதி.வசந்தகுமாரி ஆகியோரின் ஏக புதல்வி சித்துராங்கி அன்ரனி (சிந்து) 30.01.2025 அன்று (Hannover Garbsen) ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம்-நாகரத்தினம் (மூத்ததம்பி வீதி மானிப்பாய்) மற்றும் தில்லைநாயகம்-இரத்தினம்மா (குருவீதி காங்கேசன்துறை) தம்பதிகளின் செல்லப் பேர்த்தியும், ஷர்வின், டிவானியா, றியா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிந்துஜன் (ஜேர்மனி), சிவராம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், இந்திரகுமாரி(அமரர்)-கார்த்திகேயன் (ஜேர்மனி), சாந்தகுமாரி-இராஜேந்திரசீலன் (காங்கேசன்துறை), உதயகுமாரி-ஆனந்தராஜா(அமரர்) (ஜேர்மனி), விஜயகுமாரி-உதயகுமார் (மானிப்பாய்), ஜெயச்சந்திரன்-ஜெயந்தி (மானிப்பாய்) ஆகியோரின் பெறாமகளும், இந்திரகுமாரன்-புஷ்பாதேவி (காங்கேசன்துறை), சந்திரகுமாரன்-பாலசரஸ்வதி (மானிப்பாய்), சூரியகுமாரன்-சரோஜினிதேவி (ஜேர்மனி), வசந்தகுமாரன்-ஜனலக்ஷ்மி (ஜேர்மனி), விஜயலட்சுமி-நகுலேஸ்வரன்(ஜேர்மனி) ஆகியோரின் மருமகளும் மேலும் அரோயாவின் மைத்துனியும்(ஜேர்மனி), அலியாவின் (ஜேர்மனி) அத்தையும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 10.02.2025 அன்று stadtfriedhof Lahe, Laher-Feld-Strabe 19, 30659 Hannover Statt, Germany என்ற இடத்தில் மதியம் 12.00-14.00 மணியளவில் இடம்பெறும்.இத் தகவலை உறவினர்கள், உற்றார், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல் :
குடும்பத்தினர்

குரு வீதி,
காங்கேசன்துறை.

(3366)

உதயகுமார்-விஜயகுமாரி (சித்தி) தொ.பே : 077 042 4024

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 06.04.1945 | 07.02.2025 |

திரு.

## தம்பிப்பிள்ளை கனகராஜேஸ்வரன் (அருமை)

கற்குளம் கொட்டடியைப் பிறப்பிடமாகவும் முஸ்லிம் கல்லூரி வீதியை வதிவிடமாகவும் கொண்ட திரு.தம்பிப்பிள்ளை கனகராஜேஸ்வரன் (அருமை) அவர்கள் 07.02.2025 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை-சிவபாக்கியம் தம்பதியினரின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு-தங்கம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், அன்னார் புஸ்பராணியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான தேவபரம் , சந்திராதேவி, சுமேந்திராதேவி, இராஜகாந்தம் மற்றும் நாகேந்திராதேவி ஆகியோரின் நேசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான பவளமலர், அன்னலிங்கம், பஞ்சலிங்கம், யோகராணி மற்றும் லீலாவதி, பத்மராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சைலஸ்ரீ (விசி), விஜயஸ்ரீ(சுசி-சுவிஸ்), சுகுணஸ்ரீ (ஜெசி-பிரான்ஸ்), இராஜஸ்ரீ ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற மௌதாஸ் மற்றும் குகதாஸ் (ரங்கன் - சுவிஸ்), ஸ்ரீசுதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜான்சன்-கென்சி, ஜென்சிக்கா-கஜன்(சுவிஸ்), நிவேதா, கிரிஜன் (சுவிஸ்), அக்ஷாயினி (பிரான்ஸ்) ஆகியோரின் நேசமிகு பேரனும், கனிஷ்க், விகாஷ், சாஹித்தியன், பூர்ணிகா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.02.2025 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு : 077 377 5641 (ஜான்சன்)
077 615 3238 (அத்தான்)
077 463 9303 அனோஜன்)

(3367)

முஸ்லிம் கல்லூரி வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

# இராசிபலன்

09.02.2025
தை 27, ஞாயிற்றுக்கிழமை
துவாதசி முன்னிரவு 8.55மணிவரை

திருவாதிரை முன்னிரவு 7.20 மணிவரை
சுபநேரம் 9.35-11.05 மணிவரை
இராகுகாலம் 5.05-6.35 மணிவரை

சந்திராஷ்டமம் -
அனுசம், கேட்டை

வளவன்




நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், செலவுகளின் சிக்கனம் காட்டி சேமிக்க முற்படுவீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.




நிம்மதிக்காக ஆலயத்தை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், பொது வாழ்வில் புகழ் கூடும், அலங்காரப் பொருட்களை வாங்க முற்படுவீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும்.




திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம, மன ஆறுதல் தரும் வகையில் பயணமொன்று உருவாகலாம், வழிபாட்டால் இனிமை காண வேண்டிய நாள்.




ஆதாயம் இல்லாத பயணங்கள் இடம்பெறலாம், எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படலாம், வீட்டுத் தேவைகளை நிறைவேற்றும் எண்ணம் உருவாகும், சோம்பலை விலக்குவது நல்லது.




வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பால் சிந்தை மகிழ்வீர்கள், போசன சுகமுண்டு.




அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவி செய்ய முன்வருவர், செல்வாக்கு மேலோங்கும் நாள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் கூடும், போசன நன்மையுண்டு.




தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.




சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களை காணும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பொது வாழ்வில் சில கௌரவக் குறைவான சம்பவங்கள் இடம்பெறலாம்.




குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், வாழ்க்கைத் துணை வழியே வரவுகள் வந்து சேரலாம்.




மறைமுக எதிர்ப்புகள் மாறும், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், பொதுவாழ்வில் கௌரவம் அந்தஸ்து உயரும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.




உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன நன்மையுண்டு.




உற்சாகத்தோடு செயற்படுவீர்கள், தொழில் ரீதியாக வரவேண்டிய பிணக்குகள் வந்து சேரலாம், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு.

ஒருவரையும் நம்பாதவரை மற்றவர்களும் நம்ப மாட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு போட்டி

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி யா/இடைக்காடு மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு போட்டி எதிர்வரும் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

வித்தியாலய முதல்வர் கு.அகிலன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலயக்கல்வி அலுவலக தாபனம் மற்றும் பொது முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.சுவீதன். சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலயக்கல்வி அலுவலக உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் ந.கஜேந்திரன். கௌரவ விருந்தினராக கிளி/பளை மத்திய கல்லூரி உடற்கல்வி ஆசிரியர் ஆ.கமலக்குமரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (6-8)


## மணமகள் தேவை

1996, இந்து, உத்தரட்டாதி, TEAM LEADER
பூர்வீகம் – கிளிநொச்சி, வதியுமிடம் – CANADA
மணமகன் பதிவு இல: 11442.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
(சி-071)
www.EQMarriageService.com

## மணமகன் தேவை

1996, இந்து, பூரட்டாதி, NURSE
பூர்வீகம் – யாழ்ப்பாணம், வதியுமிடம் – யாழ்ப்பாணம்
மணமகள் பதிவு இல: 11468.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
(சி-071)
www.EQMarriageService.com


STS HOSPITAL
A Passion for Caring

ORTHODONTICS TREATMENTS
பல் முக சீராக்கல் சிகிச்சைகள்

எமது STS வைத்தியசாலையில்
பல்முக சீராக்கல் சத்திர
சிகிச்சை நிபுணர்

Dr. P.Sathiyakumar
Consultant Orthodontist

அவர்களிடம் தொடர்ந்தும்
சிகிச்சைகளை பெற்றிடுங்கள்
ஆலோசனைகளைப் பெற
பதிவுகளை மேற்கொள்ளுங்கள்



(3360)

பதிவுகளுக்கு
021 222 6600 / 021 222 6611

இல 130,முதலாம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.





# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி முருகேசு (இளையதம்பி)



யாழ்.நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும், இல.187, ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி, கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி முருகேசு (இளையதம்பி) அவர்கள் 06.02.2025 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-குஞ்சாச்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-சின்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், பராசக்தி (பொட்டு) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சந்திரமதி மற்றும் கணேசமூர்த்தி (கண்ணன்-கல்மடு), லோகேஸ்வரன் (வரன்-சுவிஸ்), இந்திரமதி (ஆசிரியர், கிளிநொச்சி இந்துக் கல்லூரி), கோணேஸ் (மோகன்-சுவிஸ்), ஆனந்தராஜா (றஞ்சன்-லண்டன்), நடராஜா (சாந்தன்-சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற ஜீவராணி மற்றும் அனுராதா (சுவிஸ்), சிவரூபன் (ஆசிரிய ஆலோசகர், வலயக்கல்வி அலுவலகம் கிளிநொச்சி தெற்கு), லாவண்யா (சுவிஸ்), லினா (லண்டன்), பிரசாந்தி (சுவிஸ்) ஆகியோரின் அன்புமிகு மாமனாரும் காலஞ்சென்ற மாணிக்கம் (புதுக்காடு), காலஞ்சென்ற மீனாட்சி மற்றும் கோவிந்து (பெரியகுளம்), சிவகாமி (வட்டக்கச்சி), யோகவதி (வட்டக்கச்சி), லட்சுமி (வட்டக்கச்சி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், அமிவர்ஷிகா, நேருஷா, ருஷீனா, சிஹானந், டம்ஷி, சயானிகா, சாதனா, ஆதீசன், துசாளினி, வைஸ்ணவி, சாயா, பானு, தனுஜா, பிரவீன், அகிஷாந், ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற நடராசா, சரஸ்வதி (கனடா), காலஞ்சென்ற தங்கரத்னம் (கனடா) காலஞ்சென்ற தங்கம்மா (தவம்), ஐயாத்துரை (துரை-கனடா), செல்வநாயகி (சீதா-கனடா) காலஞ்சென்ற கோபாலப்பிள்ளை (ஐயாச்சி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.02.2025 இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 2 மணியளவில் மம்மில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இல 187, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி.

தகவல் : குடும்பத்தினர்
077 663 4485, 077 699 1078

(c-2225)

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
22 . 12 . 1948



இறப்பு
22 . 01 . 2024

அமரர்

## கோபாலபிள்ளை அன்னலட்சுமி

அன்பின் உருவே!
எங்கள் ஆழ்ந்தபொருளே!
திருநெல்வேலியில் வந்துதித்த
எம் தெய்வத் திருமகளே!
எம்மைக் காத்த உறவே!
கள்ளம் கபடம் இல்லா
கருணை உள்ளத்துடன்
அள்ளிக் கொடுக்கும் தாயே!
உங்களைப் பிரிந்து ஓராண்டாகி விட்டது.
இன்னும் ஓராயிரம் ஆண்டாயினும்
எம் நெஞ்சில் தெய்வமாய் வாழ்வீர்கள்.

16/12 அரசடி அம்மன் வீதி,
திருநெல்வேலி மேற்கு.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
பேரன் அ.கௌதமன்

(821)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 479
09.02.2025


# இனவாதம் யார் கையில்...!



- அபிமன்யு -

வெண்ணை திரண்டு வரும் போது தாழியை உடைத்த கதை போல ஈழத் தமிழர் பிரச்சினை இருந்துவிடக்கூடாது.

அதில் தமிழ்மக்கள் மிகுந்த அவதானத்துடன் நடந்து கொள்ள வேண்டும். இல்லையேல் அதன் விளைவுகள் மிகப் பாரதூரமானதாக அமைந்துவிடும்.

ஆம், பயங்கரவாதத்தை அழிப்பதாய் பேரினவாத அரசுகளால் மேற்கொண்ட போர் தமிழினத்தை அழித்து அவர்களை பலமிழக்கச் செய்ததுடன் முடிவுற்றது.

போரில் வென்றவர்கள் தோற்றவர்களைப் பார்த்து இகழ்ந்ததும் அவர்கள் மனம் கோணும் வகையில் பாற்ச்சோறு பொங்கி உண்டு மகிழ்ந்ததும் நடந்திருந்தாலும் தற்போதைய நிலை அவ்வாறு இல்லை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

போர் வெற்றி வீரர்கள் என சிங்கள மக்கள் யாரைத் தலையில் தூக்கி வைத்து கொண்டாடினரோ, அவர்களை சிங்கள மக்கள் இப்போது தூக்கியெறிந்திருக்கின்றார்கள் என்பதே இதற்கு நல்ல உதாரணமாகின்றது. தன்னைத்தான் உணர்தல் என்ற கோட்பாடே சிங்கள மக்களின் இந்த மன மாற்றத்திற்குக் காரணம்.

ஆம், கோட்டாபய அரசிற்கு எதிரான அரகலியப் போராட்டத்தில் செயற்பட்ட சிங்கள இளைஞர்கள் மீது பயங்கரவாத தடைச்சட்டம் பாய்ந்த போதே சிங்கள மக்களிற்கு பயங்கரவாத தடைச்சட்டத்தின் வீரியம் புரிந்தது. அதுவரை தமிழர்களை ஒடுக்குவதற்காக மட்டும் பிரயோகிக்கப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டம் முதன் முறையாக சிங்களவர்கள் மீது பாய, அது சிங்கள மக்களை சினத்துக்குள்ளாக்கியது.

அத்துடன் பயங்கரவாத தடைச் சட்டத்தினால் தமிழ் மக்கள் பட்ட வலிகளும் உணரப்பட்டது. அதன் விளைவு பயங்கரவாத தடைச்சட்டம் உடன் நீக்கப்பட வேண்டும் என்ற குரல்கள் சிங்கள தேசத்திலிருந்து எழத் தொடங்கின. இதுபெரும் மாற்றம் என்று கூறமுடியாததாயினும் மாற்றத்திற்கான விதையாகவேணும் எடுத்துக்கொள்ளலாம்.

தமிழினம் போரினால் பட்ட வலிகளும் இழப்புக்களும் சிங்கள மக்களிற்குச் சரியாய்ப் போய்ச்சேரவில்லை என்ற உண்மையையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

போர் வெற்றியின் பின் சிங்கள மக்கள் வடக்கு – கிழக்கிற்கு வந்து சென்றமை அவர்களின் கனவு நிறைவேறியதாய் உணர்ந்தனரே தவிர, அது தமிழினம் பட்ட வலியை அவர்களுக்கு உணர்த்தவில்லை.

ஏனெனில், அந்த உணர்வை தடுத்து பயங்கரவாத போர்வையை தமிழ்மக்கள் மீது போர்த்திய பெருமை பெரும்பான்மை ஆட்சியாளர்களையே சேரும்.

ஏனெனில், அக்காலங்களில் அவர்கள் வரும் பேருந்துகளில் எழுதப்பட்டிருந்த வாசனங்கள் அவற்றை மிகத் தெளிவாக உணர்த்தின. எது எவ்வாறாயினும் தற்போதைய நிலை, சிங்கள மக்கள் தமிழினத்தின் நியாயமான கோரிக்கைகளை ஏற்கத் தொடங்கி விட்டனர்.

இனவாதத்தை விடுத்து ஆரோக்கிய நல்லிணக்கத்திற்கு கரம் நீட்டுவது புலப்படுகிறது. இதன் வெளிப்பாடே அநுரகுமார திஸாநாயக்காவின் தேசிய மக்கள் சக்தியின் அபார வெற்றி என்று கூறிவிட முடியும். இங்குதான் தமிழ் மக்களாகிய நாம் அவதானத்துடன் செயற்பட வேண்டும். இலங்கையின் சுதந்திர தினத்தன்று யாழ்.பல்கலைக்கழகத்தில் ஏற்றப்பட்டிருந்த இலங்கையின் தேசியக்கொடி இறக்கப்பட்டு கறுப்புக்கொடி ஏற்றப்பட்ட நிகழ்வு தெற்கில் எத்தகைய அதிர்வுகளை ஏற்படுத்தும் என்பதை நம் சமூகம் புரிந்து கொள்ளவேண்டும்.

சுதந்திர தினம் எமக்கு கரிநாள் என்று கூற எமக்குரிமையுண்டாயினும், ஏற்றப்பட்டிருந்த தேசியக் கொடியை இறக்கியமை, இனவாத அரசியல்வாதிகளுக்கு இனவாதத்தை மூட்ட போதுமானதான ஒன்று. தமிழினத்தின் உரிமைக்கான போரின் விதை யாழ்.பல்கலையில் தொடங்கியது. அப்பேற்பட்ட பல்கலைக் கழகத்தில் இவ்வாறான செயற்பாடுகள் நடைபெறும்போது அது சிங்கள மக்கள் மத்தியில் தவறான புரிதலை ஏற்படுத்தி விடும்.

தவிர, வடக்கில் சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டிருக்கும் விகாரைகள் தொடர்பில் நாம் சட்ட ரீதியான முன்மொழிவுகளை வைத்து அறவழிப் போராட்டங்களை மேற்கொள்ள வேண்டுமே தவிர, சட்ட விரோத பௌத்த விகாரைகளை இடித்தழிப்போம். இதற்கு தமிழ் மக்கள் ஒன்றிணைய வேண்டும் என்ற கோசங்கள் தெற்கு இனவாதிகளின் கைகளை ஓங்கவே செய்யும்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளைப் புரிந்து கொண்ட அரசாக தற்போதைய அரசு திகழ்கிறது.

நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்த இன, மத பேதம் மறந்து நாம் ஒன்றிணைய வேண்டும். ஏலவே இருந்த அரசியல் தலைவர்கள் நாட்டைக் கொள்ளையடித்து அதில் சுக போகங்களை அனுபவித்திருக்கிறார்கள். அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதுடன் நாட்டை முன்னேற்ற நாம் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும் என்று கூறுகிறது அநுர அரசு.

இவ்வாறான நிலையில் நாம் மீண்டும் இனவாதிகளின் கை ஓங்கும் வகையில் செயற்படுவோமாக இருந்தால் அது சிங்கள மக்களைத் திசை திருப்பும் கருவியை நாமே அவர்களின் கைகளில் கொடுப்பதாய் அமைந்துவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** அது சரி, யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திற்கு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க வந்தவரல்லோ. அப்ப யாழ்.மாவட்ட அபிவிருத்தி தொடர்பில ஜனாதிபதி அநுரவின்ர விசேட அறிவிப்பு ஏதேனும் இருந்ததோ.

**பண்டிதர்:-** விசேட அறிவிப்பு என்னெண்டு வரும்.

நாங்கள் அனுப்புகிற நிதியை ஏன் திருப்பி அனுப்புகிறியள் எண்டு ஜனாதிபதி கேட்க, எல்லா அதிகாரிகளும் தலையைக் குனிந்து கொண்டு இருந்தவியள் தானே!

**மூப்பர்:-** இஞ்சே பண்டிதர் ஐயா! எங்கட அதிகாரிகளுக்கு நன்கு தெரியும் இப்ப வந்த ஜனாதிபதி அநுர இனி யாழ்வர, குறைந்தது ஒருவருடம் ஆகும்.

சில வேளை அதுவும் நடக்குமோ தெரியாது.

எத்தனை பேரைச் சமாளித்த எங்களுக்கு இதுகளைச் சமாளிக்கிறது பெரிய வேலையோ எண்ட நினைப்பில தான் எங்கட அதிகாரிகளில ஒருதரப்பு இருக்குது.

**கங்காணி:-** அது சரி, தெரியாமல் தான் கேட்கிறன். ஏன் எங்கட அதிகாரிகள் நிதியைத் திருப்பி அனுப்புகினம்.

**வாத்தியார்:-** ஐயோ கடவுளே! வேலை நடந்தால் தானே பாருங்க.

கிளிநொச்சி பளைப் பிரதேசத்தில, தர்மக்கேணி எண்டொரு இடம். அங்க சுண்டிக்குளம் எண்டொரு குளம் இருக்குது.

அந்தக் குளத்திற்கு அணைக்கட்டுக்கள் எதுவும் கிடையாது. அருகிலுள்ள தனியார் காணிகளின்ர மண்ணெல்லாம் வாரி அடித்துக் கொண்டு குளத்திற்குப் போகுது.

அந்தக் குளத்தின்ர அணைக்கட்டைக் கட்டித் தாருங்கள் எண்டு கிளிநொச்சியில இருக்கிற கமத்தொழில் திணைக்களத்தைப் பல தடவைகள் கேட்டும் இன்னும் அது நடக்கல்ல.

**கங்காணி:-** ஏன்? வாத்தியார் சம்பந்தப்பட்ட கமத்தொழில் அபிவிருத்தி உத்தியோகத்தரை அணுகியிருக்கலாமே.

**வாத்தியார்:-** இப்ப ஆரோட அணுக முடியும்.

அவையள் ஒருத்தருக்கும் நேரமில்லை.

தொலைபேசி அழைப்புக்கும் பதில் இல்லை.

அப்படிப் பதில் அளிப்பதாக இருந்தாலும் விவசாயிகளுக்கு அதட்டல், தொழிலாளர்களுக்கு வெருட்டல், அதிகாரிகளுக்குப் பணிவு, சக உத்தியோகத்தர்களுக்கு நட்பு இப்படியல்லோ அவர்களின்ர அணுகுமுறைகள் இருக்குது.



## பளை தர்மக்கேணி சுண்டிக்குளத்தை கவனிப்பார் யாரும் இல்லை

குளத்திற்கு அணைகட்டுங்கள் எண்டால், உங்கட கமக்காரர் அமைப்புக்கு அறிவியுங்கள். அவர்கள் அறிக்கை தர வேணுமெண்டு குறித்த விடயத்தை தட்டிவிடுகினம்.

**சிறாப்பர்:-** ஒவ்வொரு ஏரியாவுக்கும் ஒவ்வொரு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருக்கினம்.

அவையளுக்கு தங்கட ஏரியாவில எந்தக் குளத்தை ஆழமாக்க வேணும் எந்த குளத்திற்கு அணை கட்ட வேணும் எண்டு தெரியாதோ.

எல்லாத்தையும் கமக்காரர் அமைப்பிட்ட தட்டிவிட்டால், பிறகு எதற்கு இவையள். சிறாப்பர் எழுப்பிய கேள்வியோட ஆலடி அமைதியாயிற்று.

அமைதியைக் குலைக்க சாத்திரியார் சதாசிவம் குரல் கொடுத்தார்.

**சாத்திரியார்:-** எதுக்கும் செல்வாக்குத் தான் தேவை. இப்ப கமத்தொழில் திணைக்களத்தில வேலை செய்யிறவர்கள் யாருக்காவது பளை சுண்டிக்குளத்திற்கு அருகில் காணி இருந்தால், அந்தக் குளத்தை அதிரடியாகப் புனரமைப்புச் செய்திருப்பினம்.

ஆனால் அங்க இருக்கிறது சாதாரண சனங்கள். அப்ப குளம் எப்படி புனரமைக்கப்படும்.

**விதானையார்:-** இப்ப வட மாகாணத்தில எல்லாரும் அசமந்தம் தான். இந்தாப்பாருங்க யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்திற்கு முன்னால பண்ணைக்குப் போகிற வீதியின்ர தொடக்கம் எப்படிக் கிடக்குதெண்டு.

அப்படி இருந்தும் இன்னும் அந்த வீதியில இருக்கிற உடைவுகளையும் குன்று குழிகளையும் திருத்தம் செய்வதற்கு ஒருவரும் இல்லை.

ஒரு பக்கத்தில அரசாங்கம் ஒதுக்கின நிதி திரும்பிப் போகுது. இன்னொரு பக்கத்தில வீதியில ஏற்பட்ட உடைவுகளையும் கிடங்கு பள்ளங்களையும் திருத்தம் செய்வதற்குக் காசில்லை. இது தான் எங்கட நிலைமை.

**மூப்பர்:-** ஏன் வாத்தியார் சேதமடைந்திருக்கின்ற குறித்த வீதியை உடனடியாகத் திருத்தம் செய்ய வேணுமெண்டு ஒரு தீர்மானத்தை ஆலடியில எடுத்தால் என்ன?

இவ்வாறு மூப்பர் கூற, அவசரமாக எழுந்த வாத்தியார் வைத்திலிங்கம் குறித்த தீர்மானத்தை முன்மொழிய, அதனை ஆலடி மாநாட்டில இருந்த அனைவரும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டனர்.

தொடர்ந்து ஆலடி அமைதியாகியது. அமைதியைக் குலைக்க சிறாப்பர் கனகசபை எழுந்தார்.

**சிறாப்பர்:-** வாத்தியார் நீங்கள் சொல்லுகிற வீதித் திருத்தம் என்பது ஒரு சிறிய இடம்.

ஆனால் எங்கட பகுதிகளில நீண்ட வீதிகளும் திருத்தம் இன்றி அப்படியே கிடக்கின்றன.

**கங்காணி:-** என்ன சிறாப்பர் சொல்லுறியள்.

**சிறாப்பர்:-** தீவுப் பகுதியில மண்டைதீவையும் அல்லைப்பிட்டியையும் இணைக்கும் மண்டைதீவு தில்லைச் சிவன் வீதி; எப்ப அமைக்கப்பட்டதோ அதற்குப் பிறகு அந்த வீதி ஒரு போதும் திருத்தம் செய்யப்படவில்லை.

ஏன்? திருத்தம் மட்டுமல்ல, குறித்த வீதி வேலணைப் பிரதேச சபைக்குரியதா அல்லது யாழ்ப்பாணம் வீதி அபிவிருத்தித் திணைக்களத்திற்குரியதா எண்ட சர்ச்சையும் நீண்ட காலம் இருந்தது.

சுருங்கக் கூறினால், மூன்று நான்கு கிலோ மீற்றர் நீளமான அந்த வீதி எந்தப் பதிவும் இல்லாமல் இருந்திருக்குது எனும் போது, எங்கட நிர்வாகம் எப்படி எண்டு பாருங்களன்.

**சாத்திரியார்:-** சிறாப்பர், இப்ப அந்த வீதியின்ர நிலைமை எப்படி இருக்குது.

**சிறாப்பர்:-** அதையேன் கேட்கிறியள். மழைகாலம் எண்டால் அந்த வீதி குளமாய்ப் போய்விடும்.

கடல்றோட்டை மேவிப் பாயும். அந்த வீதியில பயணிக்கிற மக்கள் பெரும் அவஸ்தைப்படுகினம் அதைவிட, அந்த வீதியில இருக்கிற மண்டைதீவு தில்லைச் சிவன் கோவிலுக்கு மாரி காலத்தில போகவே முடியாது.

இதுமட்டுமல்ல, மண்டைதீவுக்கான பொலிஸ் நிலையம், நீதிமன்றம் எல்லாம் ஊர்காவற்றுறைப் பிரிவுக்குட்பட்டது.

இதால ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்திற்கோ அல்லது நீதிமன்றத்திற்கோ செல்வதாக இருந்தால், மண்டைதீவு மக்கள் மண்டைதீவில் இருந்து பண்ணை வீதிக்கு வந்து பின்னர் அங்கிருந்து ஊர்காவற்றுறைக்குப் போக வேணும்.

குறித்த மண்டைதீவு- அல்லைப்பிட்டி இணைப்பு வீதியான மண்டைதீவு தில்லைச் சிவன் வீதி புனரமைக்கப்படுமாக இருந்தால், அந்த வீதியால மிகச் சுலபமாக ஊர்காவற்றுறைக்குச் செல்ல முடியும்.

என்ன செய்யிறது யாழ்ப்பாணத்தில இருந்து வெறும் ஆறு கிலோ மீற்றர் தூரத்தில இருக்கிற மண்டைதீவுக்கு இப்படியொரு அவலம்.


இவ்வாறு சிறாப்பர் கூறியதும் விறுக்கென எழுந்த வாத்தியார் வைத்திலிங்கம் மண்டைதீவு -அல்லைப்பிட்டி இணைப்பு வீதியை உடனடியாகப் புனரமைப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேணும்.

இது தொடர்பில சம்பந்தப்பட்டவர்கள் கருசனை கொள்ளாமல் விட்டால், மண்டைதீவு-அல்லைப்பிட்டி மக்களை ஒன்று திரட்டி வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்திற்கு முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபடுவோம் எனக் கூறினார்.

அதனை அனைவரும் ஏற்றுக் கொள்ள, அதற்குத் தனது ஆதரவும் இருப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஊர்க்கோழி முட்டையின் உற்பத்தியையும் சந்தைப்படுத்தலையும் மேம்படுத்த வழிகள் என்ன வியாசரே?

அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை

**076 097 3126**

என்ற இலக்கத்திற்கு
SMS,
Whats app செய்யுங்கள்



வடக்கு -கிழக்கு மக்களுக்கு சுதந்திரம் இல்லை. ஆனால் நாட்டில் சுதந்திர தினம் கொண்டா டப்படுகிறது. இது நீதியானதா?

### மனிதனை மனிதன் மதிக்கும் பண்பு தற் போது அற்றுவிட்டதே வியாசரே?

தேவதாரு-வதிரி

அண்மையில் யாழ்.பொஸ்கோ பாடசாலைக்கு அருகில் நான் கண்ட காட்சி ஒன்று.

மணி மதியம் 12. மாநகரசபை தூய்மைப் பணியாளர்கள் வீதியோரத்தில் தூய்மைப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

வீதியில் வந்த சிறுவன் ஒருவன் தனது துவிச்சக்கர வண்டியை நிறுத்திவிட்டு அவசர அவசரமாக கடைக்குள் சென்று ஒரு மிக்சர் பைக்கற்றை வாங்கிவந்து தூய்மைப்பணியாளர்களிடம் கொடுத்துவிட்டு சென்றான்.

இதைப் பார்க்கும் போது பெருமையாக இருந்தது. ஆயினும் எமக்கு இப்படிப்பட்ட சிந்தனை எழவில்லையே என மனம் ஆதங்கப்பட்டது.

### சில மனிதரைப் பார்த்து உவன் நரியன் என்கிறார்களே?

மதுவன்- மீசாலை

ஒருவரை நரி என்று கூறுவது கேவலமான ஒப்பீடு அல்ல.

விலங்குகளிடையே நரிக்கு மிகுந்த அறிவுண்டு என்பது நிரூபிக்கப்பட்ட ஒன்று.

சிறுவர் கதைகளில் காட்டு ராஜா சிங்கமாக திகழ்கிறது. ஆயினும் பல நேரங்களில் நரி தனது தந்திரத்தை ராஜாவிடமே காட்டி வென்று விடுகிறது.

அதனால் நரி என்று யாரும் எம்மைப் பார்த்துக் கூறினால் நம்மை மிகுந்த அறிவாளி எனப் புகழ்கிறார் என்றே பொருள்.

எந்த விடயத்தையும் எதிர்மறையாய் எடுப்பதைவிட நேர்மறையாய் எடுத்தால் எல்லாம் சரியாகிவிடுமல்லவா?

### வடக்கு -கிழக்கு மக்களுக்கு சுதந்திரம் இல்லை. ஆனால் நாட்டில் சுதந்திர தினம் கொண்டா டப்படுகிறது. இது நீதியானதா?

சுதன்-குப்பிழான்

இலங்கையில் காலம் காலமாக ஆட் சிக்கு வந்த பேரினவாத ஆட்சியாளர்கள் ஒரு நாளும் தமிழினத்திற்கான நீதியைப் பெற்றுத் தரவோ அவர்களுக்கான தீர்வை வழங்கவோ முன்வராதது துரதிஷ்டம்.

சிங்கள மக்களைத் திருப்திப்படுத்துவதிலும் அவர்கள் தமிழினத்தின் நியாயமான போராட்டத்தை புரிந்து கொள்ளாதபடியும் பார்த்துக் கொண்டனர் என்பதே உண்மை.

அதனாலோ என்னவோ சுதந்திரதினம் என்பது தமிழினத்திற்கு சம்பந்தமில்லாத ஒன்றாகி விட்டது.

அது சிங்கள மக்கள் கொண்டாடும் ஒரு பண்டிகை என்ற சிந்தனையை தமது மனதில் விதைத்துவிட்டனர் அவ்வளவே.

### படித்த மாஸ்டருக்கும் படிக்காத மாஸ்டருக்கும் என்ன வித்தியாசம் வியாசரே?

தவராஜன்-கொற்றாவத்தை

படித்த மாஸ்டர் தானும் படித்து மற்றவருக்கும் (மாணவர்கள்) படிபிக்கும் மாஸ்டர்.

படிக்காத மாஸ்டர் தன் வயலையும் உழுது மற்றவர் வயலையும் உழும் லான்மாஸ்டர்.

அங்கு மாணவர்கள் பண்படுத்தப்படுகிறார்கள். இங்கு மண் பண்படுத்தப்படுகிறது.

இந்த இரண்டு வித்தியாசங்கள் மட்டுமே படித்த -படிக்காத மாஸ்டரில் உண்டு.

### எமது நாட்டில் மட்டும் ஏன் இரண்டு சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன வியாசரே?

பிரசாந்தன்-கோண்டாவில்

இலங்கையில் உள்நாட்டுப் போர் எழக் காரணம், புரிதல் இல்லாமையே என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

அவ்வாறு சிங்களவர்கள், தமிழர்களைப் புரிந்து நடந்திருந்தால் இன்று இலங்கை ஆயிரம் சிங்கப்பூருக்குச் சமமானதாக விளங்கியிருக்கும்.

என்ன செய்வது, இனவாதிகள் அதை விரும்பவில்லை. இதற்கு சிங்கள மக்கள் பலிக்காடா ஆகினர். ஆனால் ஆடுகள் போல அறுக்கப்பட்டது தமிழினமே. கால ஓட்டம் அனைத்தையும் மாற்றும் என்று நம்பி நம்பி ஏமாந்தது தமிழினம் மட்டுமே.




### மாண்டு கிடக்கும் மனிதனின் மேனி மறுபடி எழலாமா?

மகாலட்சுமி-கொக்குவில்

பிறர் பாவங்களைத் தான் தாங்கிய இயேசு பிரான் யூதர்களால் சிலுவையில் அறையப்பட்டார்.

அப்போது தேவமைந்தன் படும் வேதனையைப் பார்த்து இந்த உலகே கண்ணீர் வடித்தது.

மனித குலத்தின் வேதனைகள் அனைத்தையும் தன் உடலில் வாங்கிய கிறிஸ்து புதைக்கப்பட்டு 3 ஆம் நாள் உயிர்த்தெழுந்தார்.

இந்த உலகில் மரித்து உயிர்த்தெழுந்த கடைசி நபர் தேவனாக இருக்கட்டுமே. அதுவே மனித குலத்திற்கு நன்மையைத் தரக்கூடியது.

### யாழ்ப்பாணத்தில் கிரிக்கெட்டின் ஆர்வம் குறைந்து வருகிறதே வியாசரே?

ஜெயக்குமார்-முகமாலை

இலங்கை அணியின் முன்னாள் அணித் தலைவர், தலைசிறந்த வீரர் சங்கக்கார அவர்களை லண்டன் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் விசேட விருந்தினராக அழைத்து, உரையாற்ற சந்தர்ப்பம் வழங்கியது.

இது உலக வரலாற்றில் கிரிக்கெட் வீரர்களுக்கு எவருக்கும் வழங்கப்படாத முதல் நிலைக் கௌரவம்.

இந்தக் கௌரவம் கிரிக்கெட் என்ற ஒரே ஒரு காரணத்தினாலும் சங்கக்காரவின் நேர்மையான விளையாட்டினாலுமே கிடைத்தது.

இப்போது எமது பெற்றோர்: விளையாடினால் பிள்ளையின் படிப்புக் கெட்டுவிடும், அவன் டொக்டர் ஆக வேண்டும் என்று ரியூசன் வாசலில் தவம் கிடக்கிறதை நினைத்தால் நெஞ்சம் பதைபதைக்கிறது.

பிள்ளைகளின் எதிர்காலத்தை பெற்றோரே வேறு திசையில் மாற்றி விடுகிறார்கள்.

### ஊர்க்கோழி முட்டையின் உற்பத்தியையும் சந்தைப்படுத்தலையும் மேம்படுத்த வழிகள் என்ன வியாசரே?

கமல்-யாழ்ப்பாணம்


முன்பெல்லாம் தமிழ் மக்களின் ஒவ்வொருவருடைய வீடுகளிலும் பத்துக் கோழி, இரண்டு ஆடு, ஒரு பசுமாடு என்பன கட்டாயம் நிற்கும்.

வீட்டின் சமையலறைக் கழிவுகள் அவற்றிற்கு உணவாகக் கொடுக்க அவை எமக்கு முட்டையாய், பாலாய் பயன்தரும்.

இது எமது வாழ்வின் தேவையில் பாதியை பூர்த்தி செய்துவிடும். கோழி வளர்த்தால் அதன் எச்சம் அரியண்டம். ஆடு, மாடு இல்லாதவன் அடை மழைக்கு இராசா என்ற பழமொழி போன்றவற்றைக் கூறி நாகரிக மோகத் தில் அவற்றைத் தவிர்த்தோம்.

இன்று போசனை உணவு இல்லாமல் மாஸ் முட்டை, மாஸ் பாலுக்காய் வரிசையில் நிற்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# களம் பல கண்ட யாழ் கோட்டை

செங்கை ஆழியான்

43

அவர்களால் புளியங்குளத்திற்கு இப்பால் வரமுடியாது போனது. பியதிலகாவின் தலைமையில் வந்த குழுவினர் புளியங்குளத்தில் தரித்து நிற்கின்ற சங்கதி முதலில் யாழ்ப்பாணம் வந்தவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை.

அவர்கள் திட்டமிட்டபடி சரியாக நள்ளிரவு 11-30 மணிக்கு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தையும் யாழ்ப்பாணக் கோட்டைச் சிறைச்சாலையையும் தாக்கத் தொடங்கினர். கோட்டைக்குள் புகுந்த அவர்கள் சிறைச்சாலையை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததும் சிறைக்காவலர்கள் பதுங்கிக்கொண்டனர். விஜயவீரவின் சிறை அறைக்குக் காவலிருந்த ஜெயில்கார்ட் அப்புக்குட்டி இரத்தினம், பெண்கள் சிறைச்சாலைக்கு அருகிலிருந்த படிகளினூடாகக் கோட்டை மதிலிற்குப் போராளிகள் ஏறுவதைக் கண்டார். அவ்வாறு ஏறிச்செல்லும் போது ஒரு கைக்குண்டினைப் பெண்கள் சிறைச்சாலைக் கூரைமீது வேணுமென்றோ, தற்செயலாகவோ போட்டார்கள். அது கூரையைப் பிய்த்துக்கொண்டு விழுந்து பெண் வார்டர் செல்லம்மா என்பவரின் வலது காலைத் துண்டித்தது. இவரே முதன் முதல் வெடிகுண்டிற்குக் காலைக் காவுகொடுத்த யாழ்ப்பாணப் பெண்.

யாழ்ப்பாணப் பொலிஸாரின் தாக்குதல் உக்கிரமாகவிருந்தது. லால் சோம ஸ்ரீ எதிர்பார்த்தமாதிரி பியதிலகா குழுவினர் உதவிக்கு வரவில்லை. போராளிகள் பலர் காயமுற்றனர். கையிருப்பில் உள்ள சன்னங்களும் குண்டுகளும் முடிந்துவந்தன. யாழ்ப்பாணப் பொலிஸார் எதிர்ப்பினை முறியடித்தபடி கோட்டைக்குள் பிரவேசிததனர். அதனால் பின்வாங்கும்படி நேர்ந்தது.

பின்வாங்கி எங்கு ஓடுவது? எப்படி ஓடுவது? தென்னிலங்கையிலிருந்து வந்த யாழ்ப்பாணம் எப்படிப்பட்டது என்பதை அறியாத பல்கலைக்கழக மாணவர்களுக்கு வலம் இடம் தெரியவில்லை. மத்தியானம் போல யாழ்ப்பாணத்திற்கு வந்து இரவு தாக்குதலைத் தொடங்கினால் அவர்கள் எங்கு எப்படி ஓடுவது? லால் சோம் ஸ்ரீ மட்டும் தப்பி யாழ்ப்பாண நகரத்திற்கு ஓடி வர முடிந்தது அவரும் அன்று அதிகாலையே கைது செய்யப்பட்டார். ஊர்காவற்றுறை ஹமன்ஹீல் கடற் கோட்டையில் சிறை வைக்கப்பட்டார்.

றோகன விஜயவீரவின் யாழ்ப்பாணக் கோட்டைச் சிறையுடைப்பு முயற்சி தோல்வியில் முடிந்தது. இச் சிறையுடைப்பு முயற்சி சம்பந்தமாகப் பின்னர் பலர் கைதாகினர். யாழ்ப்பாணத்தில் பாஸ்கரன் நாகரத்தினம் ஆகியோர் கைதாகிப் பின்னர் விடுதலையாகினர்.

வட மாகாணப் பொலிஸ் மா அதிபர் பின்னர் .ஒரு இயக்கத்தின் தலைவர் கைதாகி யாழ்ப்பாணம் கோட்டைச்சிறைச் சாலையில் வைக்கப்பட்டிருக்கிறார்.

(தொடரும்...)

# கடல் புறா

## இரகசியத்தின் திறவுகோல்

குதிரைகள் வந்து நிற்கும் குளம்பு ஒலிகளும் கேட்டன. தாரைகள் ஊதப்பட்டதாலும், குதிரைகள் வந்து நின்றதாலும், இளையபல்லவனும் அமீரும் அறைக்கதவைத் திறந்துகொண்டு மாடியின் வெளிப்புறம் செல்லவே, சேந்தனும் அவர்களைப் பின்தொடர்ந்து கைப்பிடியில் சாய்ந்து அவர்களுடன் தானும் மாளிகையின் வாசலில் நடப்பதைக் கவனித்தான்.

தாரைகள் ஊதியதைத் தொடர்ந்து பலவர்மன் திடகாத்திரத்துடன் வெளி வந்ததும் புரவியில் அமர்ந்து மாளிகைத் தளத்தை நோக்கியதும் பிறகு மகிழ்ச்சியுடன் இளையபல்லவனை நோக்கி நகைத்துவிட்டுச் சென்றதும் கூலவாணிகளின் குழப்பத்தை உச்ச நிலைக்குக் கொண்டு போயினவென்றால், அந்தச் சம்பவங்களைத் தொடர்ந்து எழுந்த அமீரின் பேச்சு அவன் கோபத்தையும் குழப்பத்தையும் கிளறிவிட்டன.

"மாண்ட பலவர்மன் பிழைத்துவிட்டான் சேந்தா! இனி நீ என்மீது கொலைக்குற்றம் சாட்ட முடியாது" என்றான் அமீர் விஷமத்துடன்.

எனக்கு ஏதும் புரியவில்லை. பலவர்மன் குப்புறக்கிடந்ததை எனது இரண்டு கண்களாலும் பார்த்தேன் என்றான் கூலவாணிகன். "அப்படியானால் புரவியில் போவது பிணமா?" என்று அமீர் எள்ளி நகையாடினான்.

விளையாடாதே என்னிடம் அமீர். இந்த மர்மத்தைச் சீக்கிரம் நான் உடைக்கிறேன் என்று சீறினான் சேந்தன்.

இருவருக்கும் மேலும் வார்த்தை முற்றுமுன்பாக இளையபல்லவன் நடுவே புகுந்து, போதும் சச்சரவு சேந்தா! நீ உன் பணியில் தோல்வியுற்றதால் பாதகமில்லை. அந்தப் பெட்டியைத் திறக்க நான் வேறு ஏற்பாடு செய்கிறேன். நீ போய் நீராடி உண்டு சற்று இளைப்பாறு. நிதானத்துக்கு வரலாம்.

என்று சொல்லி அவன் முதுகில் இருமுறை தட்டியும் கொடுத்தான்.


அதற்குப் பின் அங்கு நிற்கவும் இஷ்டப்படாத கூலவா ணிகன் அமீரை ஒரு தரம்முறைத்து நோக்கிவிட்டு அறையை விட்டு விடுவிடுவென வெளியே நடந்தான்.

அவன் சென்றதும் ஏதும் நடவாதது போலத் தங்கள் பேச்சைத் தொடர்ந்த அமீரும் இளைய பல்லவனும் கோட்டைப் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பற்றி விவாதித்தார்கள். "அமீர்! இன்னும் இரண்டு நாட்களில் அமாவாசை வருகிறது.

இதற்கு அடுத்த அமாவாசை அக்ஷய முனையின் கதியை நிர்ணயிக்கும். அக்ஷய முனையின் கதியை மட்டு மல்ல சோழ நாடு, கலிங்க நாடு, ஸ்ரீவிஜய நாடு ஆகிய மூன்று பேரரசுகளின் கதியையும் நிர்ணயிக்கும்.

அமாவாசைக்கு முன்தினம் பகிட் பாரிஸான் பகுதியிலிருந்து பதக்குகளின் தாக்குதலையும், கடற்பகுதியிலிருந்து சூளுக்களின் தாக்குதலையும் எதிர் பார்க்கிறேன்.

மேற்கு மலைத்தொடர் பகுதியை நீ கவனித்துக்கொண்டால் கடற்கரைப் பகுதியைக் கண்டியத் தேவன் கவனித்துக்கொள்வான். கோட்டையின் உட்புறத்தை நான் பார்த்துக் கொள்கிறேன். அன்று பயங்கர விளைவுகள் நேரிடும் அமீர்! அவற்றைச் சமாளிக்க உன் வரையில் நீ தயாரா?" என்று வினவினான் இளைய பல்லவன். நான் இன்றே தயார் என்றான் அமீர் இடையிலுள்ள குறுவாள்களைத் தடவிக் கொண்டே. "கண்டியத்தேவன் தயாராக ஒரு மாதம் பிடிக்கும். என்று சுட்டிக் காட்டினான் இளைய பல்லவன்.




காலத்தின் பதிவு 138

புரிந்துகொண்டதற்கு அடையாளமாகத் தலையை அசைத்த அமீர் ஆம், ஆகும்" என்றான். "அதற்குள் கோட்டையையும் நான் வலுப்படுத்தி விடுவேன். மக்கள் விழிப்புப் பெற்றிருக்கிறார்கள். அது நமக்குப் பெரும் பாதுகாப்பு" என்றான் இளையபல்லவன்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுக்களில் இருந்து விலகலாமா?



"ஓடி விளையாடு பாப்பா நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா" இது எட்டயபுரம் எமக்காய் ஈந்த புரட்சிக் கவிஞன் பாரதியின் வாயிலிருந்து வந்த வார்த்தைகள். விளையாட்டு எனும் ஒற்றைச்சொல் எமக்கென ஆயிரம் மகிழ்ச்சிகளைக் கொண்டு வருகிறது. உச்சரிக்கும் போதே எம் மனதிற்குள் ஏதோ ஒரு உணர்வு ஊறி உற்சாகம் தானாக மேலேறுகிறது. அப்படி என்னதான் இருக்கிறது விளையாட்டுகக்ளில். இன்றைய யுகம் தொழில்நுட்ப யுகம். நவீனத்துவங்களால் பூமி சுருங்கி ஒரு புள்ளியாய் மாறிவிட்டது. ஆகாய வெளி யில் அந்தரத்தில் பார்க்கவும் கடலைப் பிளந்து கருஞ்சாலை போடவும் செவ்வாயில் ஆய்வுகளைச் செவ்வனே செய்ய முடிந்த மனிதன் இன்று தன் ஆரோக்கியத்தை அடகு வைத்து விட்டான். தனது உடலைப் பலவீனமடையாமல் வைத்திருப்பதற்குத் திட்டமிட்டு நேரத்தை ஒதுக்கீடு செய்ய வேண்டியுள்ளது.

எம்மை மறந்து, கவலையெல்லாம் துறந்து, நாம் ஆடிக்களிக்க எத்தனை விளையாட்டுக்கள்... கிட்டிப் புள், கெந்திக்கோடு, கிளித்தட்டு முதலிய கிராமிய விளையாட்டுக்கள் ஒரு புறமும் ஒழுங்கமைக்கப்பட்ட சர்வதேசம் முழுவதும் பிரபல்யமான துடுப்பாட்டம், உதைபந்து, வலைப்பந்து விளையாட்டுக்கள் மறுபுறமும் மெய்வல்லுநர் விளையாட்டுக்கள், உடற்பயிற்சி அம்சங் கள் முதலியன இன்னொரு புறமும் என பலநூறு விளை யாட்டுக்களை நாம் கூறலாம்.

ஆயினும் எல்லா விளையாட்டுக்களிலும் நாம் கற்றுக்கொள்வதற்கும் பெற்றுக்கொள்வதற்கும் ஏதேனும் இருந்து கொண்டுதானிருக்கிறது.

பம்பரம் விடுவது, மாபிள் அடிப்பது இவையெல்லாம் வெறும் பொழுது போக்கு மட்டுமல்ல எண்ணத்தைக் குவித்து மனதை ஒருமுகப்படுத்தும் விளையாட்டுக்கள். சறுக்குமரம் ஏறுதல், முட்டியடித்தல், களிமண்ணில் பொம்மைகள் செய்து விளையாடுதல் என்பன திறனை வெளிகாட்ட, திறனை நிரூபிக்க, உருவாக்கு திறனை மேம்படுத்தவென பல் நன்மைகளைக் கொண்டு வருவன.

கண்ணாம்பூச்சி எனும் இனிய விளையாட்டு கண்டறியும் திறனை வளர்க்கிறது. செவிப்புலனைக் கூர்மை யாக்குகிறது. ஒரு காலத்தில் பட்டி தொட்டியெல்லாம் பரவிக்கிடந்த கெந்தி விளையாட்டு இழப்பை ஈடுகட்டும் ஆற்றலைத் தருவதோடு தன்னம்பிக்கையையும் எம் மனது களில் விதைக்கிறது.

இவை மட்டுமா சோளகம் பிறந்து மப்பெறிக்கும் காலத்தில் வயல் வெளிகளிலோ எங்கள் வாழ்விடமாய் மாறும். விதவிதமான பட்டங்களைக் கட்டி விண்பிணைத்து விருப்போடு விளையாடுவோம். இயற்கையாற்றல், தொழில் நுட்ப ஆற்றல் என்பவற்றைச் சிறப்பாகக் கற்றுக்கொள்ள இவ்விளையாட்டு உதவுகின்றது.

தாயம் விளையாட்டில் எதுவிழுந்தால் எங்கே காயை நகர்த்தலாம்? எனும் கணக்கீடுகளிலும் காத்திருப்புக் களிலும் இன்றைய கணிப்பான்கள் இல்லாத மனக்கணக்கு வேகம் கொள்ளும். சிலம்பம் என்பது பாரம்பரியம் மிக்க தோர் விளையாட்டாகும். அத்துடன் தமிழர்தம் தற்காப்புக் கலையும் கூட பல்வேறுபட்ட தற்காப்புக்கலைகளுக்கெல் லாம் முன்னோடியாய் சிலம்பம் அமைந்துள்ளது.

நம் சூழலில் ஒழுங்கமைக்கப்பட்ட விளையாட்டுக்கள் பல தற்போது நடைமுறையில் உள்ளன. அவற்றை வளர்ப்பதற்கென பாடசாலைகள் தொடக்கம் பல்வேறு அமைப்புக்களும் நிறுவனங்களும் காணப்படு கின்றன. ஆனால் நாம் முற்காலத்தில் ஆடிய மேற்சொன்ன விளையாட்டுக்கள் மெல்ல மெல்ல மறைந்து வருவதனை நாம் காண்கின்றோம். எம் பிள்ளைகளின் கைகளில் திறன்பேசி வந்த பின்னர் இந்நிலமை மேலும் அதிகரித்து விட்டது.

சிலம்பம் போன்ற சில விளையாட்டுக்கள் தற்போது மீண்டும் உயிரூட்டப்பட்டு வருவது மனதிற்கு ஓரளவு நிறைவைத்தந்தாலும் பல விளையாட்டுக்கள் மறைந்து வருவதனை நாம் மறந்து விடலாகாது. நன்மையெனும் நாற்றுக்கள் பலவற்றைத் தம்மகத்தே கொண்டுள்ள இவ் விளையாட்டுக்களை வளர்த்து அறுவடை செய்து அவற்றின் பயனைப் பற்றிக்கொள்ள நாம் ஒவ்வொருவரும் முயற்சிக்க வேண்டும். முயற்சியும் பயிற்சியுமே எம்மை முன்னோக்கிக் கொண்டு செல்லும்.

தி.சாந்தகுமார், ஆசிரியர் – யா/வட்டு மத்திய கல்லூரி

# ஆச்சி அறிவுரை



## சக்கரைத் தண்ணீர

### என்ன பேராண்டி...

சக்கரைத் தண்ணீர் எண்டுற சொல் உனக்குப் புதிசா இருக்கும். கோவில் திருவிழாக்களில் பக்தர்கள் தாகம் தீர்க்கிறதுக்காக தண்ணீர்ப்பந்தல் போட்டிருக்கும். அதை நீ பார்த்திருப்பாய் தானே?

முந்தைய காலங்களில் அந்த தண்ணீர் பந்தல்களில் சக்கரைத் தண்ணீர்தான் குடுக்கிறது.

நல்ல சுத்தமான நாட்டுச் சக்கரையைத் தண்ணீரிலே கரைச்சு அதுக்குள்ள அளவா தேசிப்புளி விட்டால் சுவையான சக்கரைத் தண்ணீர் தயார்.

அது மிகச் சுவையானது பேராண்டி. அதோட வெயில் வெக்கைக்கு களைச்சுப்போன பக்தர்களுக்கு நீர் இழப்பு ஏற்பட்டு உடல் சோர்வாய் இருக்கும். இந்த நேரத்திலை இனிப்புச் சுவையும் புளிப்புச் சுவையும் உடலில் சேர புது உற்சாகம் வரும். களைப்பெல்லாம் பறந்து போகும்.

இந்த ஒரு காரணத்துக்காகத் தான் கோவில் திருவிழாக்களில் சக்கரைத் தண்ணீர் வார்க்கிறது.

சக்கரைத் தண்ணீரைத் தவிர்த்து ரிங்ஸ்ல நிண்டினம். அதுக்குப் பிறகு இப்ப சர்பத்திலை வந்து நிக்கினம்.

என்னத்தை நாங்கள் குடிக்கிறது எண்டாலும் அதிலை ஆரோக்கியம் இருக்கவேணும். அதை விட்டிட்டு பவர் காட்ட நினைச்சு நாங்கள் செய்யிறது எல்லாம் மனிசரின்ர ஆரோக்கியத்தைக் கெடுக்கிறது மாதிரியெல்லோ இருக்கு. உந்த ரிங்சிலையும் சர்பத்திலையும் என்ன இருக்குதெண்டு தெரியலையோ பேராண்டி.

எங்கட பாரம்பரிங்களை மறந்து நவீனத்துக்குள்ள புகுந்து மனிசரை மனிசரே அழிக்கிறது இப்ப நடந்து கொண்டிருக்கு. ஒரு விசயத்தைச் செய்யுறம் எண்டால் அது ஏன்? எதுக்கு? எண்டு ஒன்றுக்கு நூறுதரம் யோசிக்க வேணும்.

அதோட எங்கட பாரம்பரியங்களை மாத்துறதெண்டால் அதிலை இருக்குற விசயங்களைப் புரிஞ்சு கொண்டால் அதை மாத்த முயற்சி செய்ய மாட்டம். ஆனால் இப்ப அதுகளை யெல்லாம் தவிர்த்துப் போட்டு நவீனத்துக்குள்ள புகுந்து ஆயுளைக் குறைக்கிறது மனிசருக்கு நல்லதில்லையே.

இந்தக் கொடுமைகளால தான் நாற்பது கடந்தவுடனேயே இலவச இணைப்பா சலரோகம் ஒட்டிக் கொள்ளுது.

எங்கட ஆரோக்கியம் எங்கட கையிலை இருக்குது எண்ட சிந்தனை எம் ஒவ்வொருவருக்கும் இருக்கவேணும் அப்பதான் நாங்கள் நோய் நொடி இல்லாமல் வாழலாம்.

பேராண்டி வீட்டிலை இருக்கும் போது சக்கரைத் தண்ணீர் தயாரிச்சு குடிச்சுப்பார். குடிச்சிட்டு பாட்டிட்டை சொல்லு?

பாட்டி வருவா...

மாவை நா.கஜேந்திரன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறைந்திடும் நினைவுகள்...

வாழ்வின் காலம் நீண்டிடும் பொழுதிலும்
குறுகிய நினைவுகள் உறைந்திடும் என்றும்

உணர்வுகள் சூழ்ந்த உறவுகள் யாவும்
இணைந்திடும் வேளை பிறந்திடும் இன்பம்



கனவுகள் போன்று நிகழ்ந்த நினைவுகள்
கனவாய் மாறும் உறவின் பிரிவில்

காலம் உணர்த்தும் வலிகள் யாவும்
வடுவாய் நெஞ்சில் உறைந்திடும் என்றும்

உறவுகள் தவறினை உணர்ந்திடும் பொழுது
துளிர்த்திடும் மீண்டும் அழகிய பொழுதுகள்

கடந்திடும் நாட்கள் கனவாய் எரிந்திட
நினைவுகள் மனதில் மலராய் மலர்ந்திட

அழகிய நினைவுடன் வாழ்ந்திடு உலகில்
உந்தன் பாதை உனக்காய் திறந்திடும்.

ந.விதுசன் கற்கோவளம்

# தப்ப விடாத ஒப்பம்..!



இளமைக் கல்வியை
இழந்த வாலிபன்
வழமையாய் உழைத்து
வளங்கள் சேர்த்தான்..!

காதலில் விழுந்தான்
காதல் ஈக்காக
மாற்றினான் மதத்தை!
முத்து மகள் மூவர் பெற்றான்!

சிக்கன வழியில்
சீரோடு வாழ்ந்தான்!
மனையாள் உறவினரும்
"வினை"யோடு வந்தார்!

ஏதேதோ பத்திரங்கள்...!
சாட்சிக்கு ஒப்பமென
சாகச மனையாள் கூற
வாசியா மன்னன் வைத்தான்!

காலச் சக்கரம் சுழல...
கடிதம் ஒன்று வந்தது..!
கட்டாத கடன் தொகை
இருபது லட்சம் என்றது!

வாங்காத கடனுக்கு
வந்த கடிதம் கண்டு
ஒப்பத்தின் நினைவு வர
சதி கண்டு அதிர்ந்தான்!

சிக்கனத்தால் சிறுக சேர்த்து
இருப்பவை இழந்து விடின்
புதல்விகளின் எதிர்காலம்...?
புலம்பினான் கண்ணீரால்!

தப்ப வழி தேடி
தவித்தும் பலனில்லை..!
மனையாள் மதியாலே
தொங்கினான் தூக்கிலே..!

இரா.ஜெயக்குமார்

# நீ வசிக்கும் தெரு



மான்களைப் போல
ஒரு ஆண்கள் கூட்டம்
நீ வசிக்கும் வீதியெங்கும்

துள்ளிவிளையாடும்
மந்திக் குரங்குகள் போல
மதிலேறி உன் முகம் பார்க்க ஆடவர் தம்
விழிகள் அலை பாயும்

சீதனம் வேண்டாம்
சிலபணம் வேண்டாம்
இவள் ஒருத்தி போதுமென்று
சம்பந்தங்கள் சரிந்து
உன் வீட்டு வாசலில்
தானாய் விழும்


நீ வரும் பாதையில் பலர் கூடுவதால்
உடனடியாக அவசரகால சட்டம்
அரசு பிறப்பிக்கலாம்

முப்படை முன்கேற்றில்
நிற்கலாம் எதற்கும்
தயார் நிலையில்
நானும் நிற்கின்றேன்
விரும்பினால் நீங்களும் நில்லுங்கள்

கவிக்கிறுக்கன், இணுவில்

# கால மாற்றம் போல கரையுமோ...

சேற்று வயலில்
செந்நெல் விதைத்து
மும்மாரிப்பயிர்கள்
செம்மையுடன்
வளர்த்த காலங்கள்
வாழ்வுரிமையில்
வறட்சியானாலும்
ஓரணியில் இணைத்து
உரிமைக்குரலுக்கும்
குரல்கள் மனமாற்றங்களில்
அறவழி, மறவழி கண்டும்
இன்று போர் விடியலுக்கு
கட்டியம் கூறி...
காலம் மாற்றம் போல்
சூறாவளியாகி
கடந்து விடுமோ
காலமே பதில் சொல்
நம்மினத்தின் மனங்களில்
நன்மாரிப்பொழிந்திட.



கலாபூஷணம், தமிழினியன் பரந்தாமன் – வவுனியா.


## அன்பு வாசகர்களே!

உங்கள் அபிமான சங்குநாதத்தில்
நீங்களும் எழுதலாம்....

- அரசியல்
- இலக்கியம்
- கவிதை
- கட்டுரை

ஆக்கங்களை உங்கள் பெயர், முகவரி,
தொலைபேசி இலக்கம் என்பவற்றை
குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள்.

ஆசிரியர், வலம்புரி - சங்குநாதம்
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
E-mail : valampurii@yahoo.com
Whatsapp : 076 097 3126


# நீயும் நானும்

அரைநிமிடத் தரிப்புத்தான்:
என்றாலும் நண்பா
உன்னை நான்
இனங்கண்டு கொண்டேன்:
சிலும்பல் மயிர்
கறுப்புப் புஜத்தில்
தடித்த தசைகள்
ஆட்டுவால் தாடி!
அந்தக் கதை உனக்கு
நினைவில் இருக்கிறதா?
பள்ளி முன்றிலில்
வியர்த்து வடியும்
ஐஸ்பழக்காரனை அடித்துத் துரத்திய
மீசைக்கார பொலீஸ்
வஸ் கம்பம் நிழலாய் நீளும்:
"செல்வம்.... செல்வம்"
நீயும் திரும்பிப் பார்க்கிறாய்
எங்கே அந்தச்
சிரிக்கும் விகளிப்பு:
"செல்வம் வெறுமை!
செல்வம்... வரட்சி :
புகை கக்கி அசையும் வண்டி:
என் அன்பான நண்பனே!
நீ ஏழைதான்: நான்....?
(காற்சட்டை போட்டிருக்கிறேன்.)



O தும்பிழான் ஐ.சண்முகன்

# அழைப்பு

ஏழு ரொட்டிகளை
நாலாயிரம் பேருக்கு
வயிறாரப் பரிமாறிய
யேசு பிதாவே!
ஓர் அவிழ்
சோற்றினால் முனிவர்
பரிவாரங்களின்
பசித்துயர் போக்கிய
கண்ண பரமாத்மாவே!
நீங்களெல்லாம்
இப்பொழுது வரமாட்டீர்களா?...



O மாவை நித்தியானந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்



**படம்: அமர தீபம்**
**இசை: டி.சலபதிராவ்**
**பாடல்: கே.பி.காமாட்சி**
**குரல்கள்:ஏ.எம்.ராஜா, பி. சுசீலா**

தேன் உண்ணும் வண்டு
மாமலரைக் கண்டு
திரிந்தலைந்து பாடுவதேன்
ரீங்காரம் கொண்டு
பூங்கொடியே நீ சொல்லுவாய் ஓ.ஓ.ஓ
பூங்கொடியே நீ சொல்லுவாய்

வீணை இன்ப நாதம்
எழுந்திடும் வினோதம்
விரலாடும் விதம் போலவே
காற்றிலே.. தென்றல் காற்றினிலே
காற்றினிலே.. சலசலக்கும்
பூங்கொடியே கேளாய்
புதுமை இதில்தான் என்னவோ..ஓ.ஓ.ஓ.
புதுமை இதில்தான் என்னவோ

மீன் நிலவும் வானில்
வெண்மதியைக் கண்டு
வெண் அலைகள் ஆடுவதேன் ஆனந்தம் கொண்டு
மென் காற்றே நீ சொல்லுவாய் ஓ.ஓ.ஓ.
மென் காற்றே நீ சொல்லுவாய்

கான மயில் நின்று வான் முகிலைக் கண்டு
களித்தாடும் விதம் போலவே
கலை இதுவே ..
வாழ்வின் கலை இதுவே
கலை இதுவே...
கலகல என்னும் மெல்லிய பூங்காற்றே
காணாததும் என் வாழ்விலே..ஓ.ஓ.ஓ.
காணாததும் என் வாழ்விலே

கண்ணோடு கண்கள் பேசிய பின்னாலே
காதல் இன்பம் அறியாமல் வாழ்வதும் ஏனோ..
கலை மதியே நீ சொல்லுவாய்..ஓ.ஓ.ஓ.
கலை மதியே நீ சொல்லுவாய்..ஓ.ஓ.ஓ.

அன்பு வாசகர்களே!
காலத்தால் அழியாத கானம் பகுதியில்
உங்களுக்குப் பிடித்த பழைய
பாடல்களை, பெயர், முகவரியுடன் வட்சப்
செய்தால் உங்கள் விருப்பப் பாடல்
உங்கள் பெயருடன் வெளிவரும்.
076 097 3126

### "குவான்டானமோ சிறை"

# அமெரிக்க ஜனநாயக வரலாற்றில் மோசமான களங்கம்

உலகின் ஏதோ ஒரு மூலையில் இருக்கும் குட்டி தேசத்தில் மனித உரிமை மீறல் நடந்தாலும் அமெரிக்கா எதிர்ப்பு தெரிவிக்கும். சில நாடுகளின் தலைவர்கள் உடனே, "குவான்டானமோ சிறையில் நீங்கள் செய்வதை விடவா மற்ற நாடுகள் மனித உரிமை மீறல் செய்து விட்டன?" என்று எதிர்க்கேள்வி எழுப்புவார்கள்.

அமெரிக்காவின் ஜனநாயக வரலாற்றில் மிக மோசமான களங்கம், குவான்டானமோ சிறை. 21ஆம் நூற்றாண்டின் மிகக் கொடூரமான மனித உரிமை மீறல்கள் இங்குதான் நிகழ்ந்தன. பல நாடுகளில் சர்வாதிகார அரசுகளை வீழ்த்தி, ஜனநாயகக் காற்றை வீசச் செய்ததாகச் சொல்லிக் கொள்ளும் அமெரிக்கா, செய்த மிகப்பெரிய ஜனநாயகப் படுகொலைக்கும் அநீதிகளுக்கும் சாட்சியான அந்தச் சிறையைத் திறந்து 23 ஆண்டுகளாகின்றன. நான்கு ஜனாதிபதிகள் மாறி விட்டார்கள். இதை மூடுவோம் என்று மூன்று ஜனாதிபதிகள் வாக்குறுதி கொடுத்தார்கள். ஆனாலும் அந்தச் சிறை அமெரிக்காவின் அழியாக்கறையாகத் தொடர்கிறது.

2001 ஆம் ஆண்டு செப்டம்பர் 11 ஆம் திகதி நிகழ்ந்த உலக வர்த்தக மையத்தாக்குதலுக்குப் பிறகு அல் கொய்தா தீவிரவாத இயக்கத்தை வேரறுப்பேன் என சபதம் எடுத்தார் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஜார்ஜ் புஷ். பாகிஸ்தானிலும் ஆப்கானிஸ்தானிலும் கண்மூடித்தனமாகப் பலரைக் கைது செய்து விசாரித்தது அமெரிக்க இராணுவம். இன்னொரு பக்கம் சி.ஐ.ஏ ஏஜென்டுகளும் பலரைக் கைது செய்தார்கள். அவர்களை அமெரிக்க மண்ணில் வைத்து விசாரித்தால், அமெரிக்க சட்டப்படி அவர்களை நடத்த வேண்டும். அதைச் செய்ய விரும்பாததால் வேறு வழி தேடியது அமெரிக்கா. அமெரிக்காவின் காலடியில் கியூபா தீவில் குவான்டானமோ வளைகுடாவில் அமெரிக்க இராணுவ முகாம் ஒன்று இருக்கிறது. அந்தப்பகுதியில் தற்காலிகச் சிறை ஒன்றை உருவாக்கியது அமெரிக்க இராணுவம்.

சுற்றிலும் கடல், உயரமான சுவர்களும் கம்பிவேலிகளும் மின்வேலிகளும் பாதுகாப்பு. தப்பிக்கவே முடியாது. உள்ளே கொளுத்தும் வெயிலில் விலங்குகளால் பிணைக்கப்பட்டு, கைதிகள் சித்திரவதை செய்யப்பட்டார்கள். சித்திரவதையில் காயமடைந்தாலும், எலும்புகள் நொருங்கினாலும் எந்த மருத்துவமும் கிடைக்காது. அமெரிக்க சட்டங்கள் இங்கே செல்லாது என்பதால் இந்தச் சிறைக்குள் ஒருவரை அடைத்து வைக்க எந்த நீதிமன்ற ஆணையும் தேவையில்லை, 'என்ன குற்றம் செய்தார்' என கைதியிடம் சொல்ல வேண்டிய அவசியமில்லை, வழக்கும் தேவையில்லை, நீதி விசாரணையும் தேவையில்லை. ஒருவர் நிரபராதி என்று தெரிந்தால், அவரை எப்போது விடுவிப்போம் என்று சொல்லவும் தேவையில்லை. இப்படிப்பட்ட நரகத்தில் ஒரு கட்டத்தில் 780 கைதிகள் அடைத்து வைக்கப்பட்டிருந்தார்கள். இவர்களை விசாரிக்க 2,000 இராணுவத்தினர் இருந்தார்கள்.

இந்தச் சிறையும் சித்திரவதையும் உண்மையில் தீவிரவாதத்தை வேரறுக்கவில்லை என்பதை அமெரிக்கா தாமதமாகவே உணர்ந்தது. ஒருவரை அமெரிக்க இராணுவம் பிடித்துச் சென்றால், அதனால் தூண்டப்பட்டு பல பேர் தீவிரவாதத்தின் திசையில் போனார்கள். அமெரிக்காவின் கைது நடவடிக்கைக்கு நேச நாடுகளே எதிர்ப்பு தெரிவித்தன. தன் ஆட்சியின் இறுதிக்கட்டத்தில் இதை உணர்ந்த ஜார்ஜ் புஷ், சிறையில் இருந்த அப்பாவிகள் பலரை விடுதலை செய்ய உத்தரவிட்டார். அதன்பின் 242 கைதிகள் அங்கு இருந்தனர். 'விரைவில் சிறையை மூடுவேன்' என அறிவித்தாலும் அவரால் அது முடியவில்லை. 'இந்தச் சிறையை மூடுவேன்' என வாக்குறுதி கொடுத்த பராக் ஒபாமா குடியரசுக் கட்சியினரின் எதிர்ப்பால் அதைக் கைவிட்டார். தன் எட்டாண்டுக் கால ஆட்சியில் பல கைதிகளை விடுவித்தார் அவர். கடைசியில் 40 பேர் இருந்தார்கள். அவர்களை அமெரிக்கா கொண்டுவந்து அந்த நாட்டின் சிறைகளில் அடைக்கலாம் என முயற்சிகள் நடந்தபோது பாராளுமன்றம் அதைத் தடுத்து விட்டது.

ட்ரம்ப் ஆட்சிக்கு வரும்போதே, "அமெரிக்காவில் அட்டகாசம் செய்யும் விஷமிகளைத் தூக்கிப் போய் குவான்டானமோ சிறையில் போடுவேன்" என்று மிரட்டினார். ஆனால், அப்படி எதையும் அவர் செய்யவில்லை. அவர் யாரையும் விடுவிக்கவும் இல்லை. ஜோ பைடனும் இதை மூடுவதாகச் சொல்லி ஆட்சிக்கு வந்தார்.



எதிர்க்கட்சியின் பிடிவாதத்தால் அது முடியவில்லை. இப்போது அங்கு 15 கைதிகள் இருக்கின்றனர். ஈராக், லிபியா, பாகிஸ்தான், ஆப் கானிஸ்தான், ஏமன், சோமாலியா, இந்தோனேஷியா, சவூதி அரேபியா, மியான்மர் நாடுகளைச் சேர்ந்தவர்கள் இவர்கள்.

இந்தச் சிறையை மூடமாட்டேன் எனப் பிடிவாதம் காட்டிய ட்ரம்ப் மீண்டும் ஆட்சிக்கு வந்திருக்கிறார்.

ஆனால் இந்தச் சிறையை நடத்துவதற்கு ஆண்டுக்கு ரூ.4,330 கோடி செலவாகிறது என்ற விடயம் அவருக்கு அதிருப்தி தந்திருக்கிறது. 'இத்தனை கோடி செலவழித்து இப்படி ஒரு சிறை தேவையா' என அவர் யோசிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

436

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## மீண்டும் சிக்கன்குனியா (Chikungunya Again)

உங்களுக்கு ஞாபகமிருக்கும் சுமார் 19 வருடங்களுக்கு முன்னர் அதாவது 2006 ஆம் ஆண்டு இலங்கையில் சிக்கன் குனியா ஒரு பாரிய தொற்றை ஏற்படுத்தியிருந்தது. யாழ்ப்பாணமும் இதற்கு விதிவிலக்காக இருக்கவில்லை.

யாழ்ப்பாணத்தில் குழந்தைகளிலிருந்து வயோதிபர்கள் வரை பல்லாயிரக்கணக்கான மக்களை இந்நோய் தாக்கி கடுமையான உடல் உபாதைகளை ஏற்படுத்தியிருந்தது. சிலர் இந்நோயினால் உயிரிழந்து போனார்கள்.

இந்தக் கட்டுரையில் சிக்கன் குனியா என்றால் என்ன? அது எவ்வாறு பரவுகின்றது? அதன் அறிகுறிகள் என்ன? இந் நோயிலிருந்து பாதுகாத்துக் கொள்வது எப்படி என்பது போன்ற விடயங்களைப்பார்ப்போம்.

சிக்கன்குனியா என்பது டெங்குவைப்போல ஒரு RNA வைரஸால் ஏற்படும் நோயாகும். இது டெங்குவைப்போலவே Aedes egypti, Aedes albopictus எனும் இருவகை நுளம்புகளால் பரப்படுகின்றது.


அண்மையில் கொழும்பு நகரிலும் அண்மித்த பகுதிகளிலும் சிக்கன்குனியா நோயினால் பீடிக்கப்பட்ட சிலர் அடையாளம் காணப்பட்டுள்ளார்கள். எனவே மீண்டும் இந்த நோய் இலங்கையில் பரவக் கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன. ஏனென்றால் டெங்கு நோயைப் பரப்பும் ஈடீஸ் நுளம்புகள் இலங்கையில் அதிகம் காணப்படுகின்றன.

இந்த நோயின் அறிகுறிகளைப் பார்ப்போமாக இருந்தால் இதன்போது கடுமையான காய்ச்சல் ஏற்படும். மூட்டுக்களில் கடுமையான நோவும் வீக்கமும் ஏற்படும்.

உடலிலுள்ள ஏறத்தாழ எல்லா மூட்டுக்களிலும் கடுமையான நோ ஏற்படும்.

இதைவிட தலையிடி, கழுத்து நோ என்பவையும் ஏற்படும். இந்த நோயின் அறிகுறிகள் நுளம்பு கடித்து 3 தொடக்கம் 7 நாட்களில் ஏற்படுகின்றன. இந்த நோயின் காய்ச்சல் 7-10 நாட்களில் தணிந்து விடும். ஆனால் மூட்டுநோ மாற சில வாரங்கள் சிலருக்கு சில மாதங்கள் எடுக்கலாம். மிகச் சிலருக்கு மூட்டு நோ பல வருடங்களுக்குத் தொடரலாம். நீடிக்கும் மூட்டு நோ தான் இந்த நோயின் பாரதூரமான பிரச்சினை

இந்த நோயினால் மரணமேற்படுவது குறைவு. ஆனால் 65 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு குறிப்பாக நீரிழிவு, இதய வருத்தம் உடையவர்களுக்கு இந் நோய் மரணத்தை ஏற்படுத்தலாம். அது மட்டுமல்லாது இந் நோய் சிலருக்கு மூளை, இதயம், நுரையீரல் போன்ற முக்கிய உடல் உறுப்புக்களில் பாதிப்பை ஏற்படுத்தலாம்.




இனி சிக்கன் குனியா என்று ஏன் இந்த நோயை அழைக்கிறார்கள் எனப் பார்ப்போம். இந்த நோயிற்கும் (Chicken) கோழிக்கு எந்த விதமான சம்பந்தமும் இல்லை. சிக்கன்குனியா என்பது தன்சானியா நாட்டின் கிமொண்டே மொழியில் வளைந்த அல்லது கூனிய உடல் எனப்படும் கடுமையான மூட்டு நோயினால் உடல் கூனியும் வளைந்தும் காணப்படுவதால் இந்தப் பெயர் ஏற்பட்டது.

இந்த நோய் இலங்கையில் முதன் முதலில் 2006 ஆம் ஆண்டு ஏற்பட்டது. அதற்கு முன் இந்த நோய் இலங்கையில் ஏற்படாததால் இந் நோய்க்கு எதிர்ப்பு சக்தி ஒருவருக்கும் இருக்கவில்லை. எனவே இந் நோயால் ஏறத்தாழ எல்லோருமே பாதிக்கப்பட்டார்கள். இதன்போது நாட்டில் பரசிற்றமோல் போன்ற நோய் நிவாரணிகளுக்கு பெருந் தட்டுப்பாடு ஏற்பட்டது.

ஆனால் இம்முறை இவ்வாறு ஏற்படப்போவதில்லை. பெரும்பாலானவர்களுக்கு எதிர்ப்பு சக்தி இருப்பதால் அதிகமாகப் பரவுவதற்கு வாய்ப்பில்லை. 20 வயதிற்குட்பட்டவர்களையே இம்முறை தாக்கும் சந்தர்ப்பம் அதிகமாகும். இந்நோய் ஒருமுறை ஏற்பட்டால் ஆயுள் பூராகவும் எதிர்ப்பு சக்தி இருப்பதால் மறுமுறை ஏற்படுவதில்லை.

இனி இந் நோய்க்கு எவ்வாறு சிகிச்சை அளிப்பது என பார்ப்போம். இந்நோயைக் குணப்படுத்த இது வரை மருந்துகள் எதுவும் கண்டு பிடிக்கப்படவில்லை இந்த நோய்க்கு வலி நிவாரணிகளை வைத்தியரின் ஆலோசனைக்கு ஏற்ப பயன்படுத்த வேண்டும். டெங்கு, எலிகாய்ச்சல், உண்ணிகாய்ச்சல் போன்றவையும் இந்த நோய் பரவும் காலத்தில் (மாரிகாலத்தில்) பரவுவதனால் இந்த நோயை வேறுபடுத்தி அறிய ஒரு வைத்தியரின் ஆலோசனையைப் பெற வேண்டும்.

ஏனென்றால் வலி நிவாரணிகள் டெங்கு போன்ற நோய்களில் பாதிப்பை ஏற்படுத்தலாம். இதை விட நல்ல ஓய்வு, போதிய அளவு நீராகாரங்களை எடுத்தல் போன்ற வழிமுறைகளைக் கடைபிடிக்க வேண்டும்.

இந்நோய்க்குத் தகுந்த சிகிச்சை முறைகள் இல்லாததால் வருமுன் காப்பதே சிறந்தது. இந்த நோய் பரவுவதைத் தடுப்பதற்கு டெங்குக் காய்ச்சல் பரவுவதை தடுக்கும் அதே வழிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். டெங்குக் காய்ச்சலைப் பரப்பும் அதே நுளம்புகளே இந்த நோயைப் பரப்புகின்றன. எனவே ஈடிஸ் நுளம்பு பெருகும் இடங்களைக் கட்டுப்படுத்துவது பிரதானமானதாகும்.

ஈடீஸ் நுளம்பானது சுத்தமான சிறிய அசையாத நீர் தேங்குமிடங்களில் உதாரணமாக பழையடயர்கள், சிரட்டைகள், கோம்பைகள், ஐஸ்கிறீம், யோகட் கப்கள், கூரை பீலிகான்கள், அடைபட்ட கான்கள், தொட்டிகள் போன்ற இடங்களில் முட்டையிடுகின்றது. ஆகவே இத்தகைய நீர் தேங்குமிடங்களை எமது சூழலிலிருந்து அகற்ற வேண்டும். இந்த நுளம்புகள் பகலில் கடிப்பதால் நீளமான காற்சட்டை, நீளக் கையுடைய சேட் என்பவற்றை அணிய வேண்டும்.

இதைவிட சிற்றனெல்லா எண்ணை போன்ற நுளம்பு விரட்டிகளை பூசிக்கொள்ளலாம். நோய்வாய்ப்பட்ட ஒருவரை நுளம்பு வலைக்குள்ளே வைப்பதன் மூலம் மற்றவர்களுக்கு நோய் தொற்றுவதைத் தடுக்கலாம்.

இந்த நோய்க்கு அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு தடுப்பூசி உள்ளது. இது உலகில் சில நாடுகளில் பாவனையில் உள்ளது ஆனால் இலங்கையில் இன்னும் தடுப்பூசி பாவனையில் இல்லை. இந்த நோய் தொற்றியுள்ளதா என அறியும் குருதிப் பரிசோதனைகள் கண்டி, அநுராதபுரம் போன்ற வைத்தியசாலைகளில் உள்ளன.

யாழ்ப்பாணத்தில் இருந்தும் இரத்த மாதிரிகளை அனுப்புவதன் மூலமும் சோதித்து அறியலாம். முடிவாக சிக்கன் குனியா நோய் யாழ்ப்பாணத்திலும் பரவுவதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன.


ஆனால் 2006 ஆம் ஆண்டு ஏற்பட்டது போல ஒரு பாரிய தொற்று ஏற்படுவதற்கான வாய்ப்பு குறைவாகவே காணப்படுகின்றது. இந் நோய்க்கு குணப்படுத்தக்கூடிய மருந்துகள் இல்லை எனவே வருமுன் காப்பதே சிறந்தது. எனவே நமது சுற்றாடலை நுளம்பு பெருகாமல் சுத்தமாக வைத்திருப்பதன் மூலம் இந்நோயிலிருந்தும் டெங்கு போன்ற உயிர்கொல்லி நோய்களிலிருந்தும் எம்மையும் நம் குடும்பத்தையும் பாதுகாத்துக் கொள்ளலாம்.

Dr.S.கேதீஸ்வரன்
பொது வைத்திய நிபுணர்,
யாழ்.போதனா வைத்தியசாலை.

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும், அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டைமானாறு வெளிக்கள நிலைய நிர்வாகத்தினர் ஆளுநருடன் சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் நிர்வாகத்தினருக்கும் வட மாகாண ஆளுநருக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் செயற்பாடுகள் எவ்வாறு பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்டிருந்தன என்பது தொடர்பிலும், எதிர்கொண்டு வரும் சிக்கல்கள் தொடர்பாகவும் அவற்றை எவ்வாறு சீர் செய்யலாம் என்றும் நிர்வாகத்தினரால் ஆளுநருக்கு எடுத்துரைக்கப்பட்டது.

இது தொடர்பில் வடக்கு மாகாண கல்வி அமைச்சு மற்றும் கல்வித் திணைக்களங்களின் கலந்துரையாடல் ஒன்றை நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்வதாக ஆளுநர் இதன் போது தெரித்தார்.

தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் பரீட்சைகள் கல்விச் சமூகத்தின் மத்தியில் சிறப்பான வரவேற்பைக் கடந்த காலங்களில் பெற்றிருந்தன எனச் சுட்டிக்காட்டிய ஆளுநர், மீண்டும் அவ்வாறானதொரு நிலைமை ஏற்பட வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார். (6-8)

# 'நிகரி விருது' விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபை மகளிர் விவகார அமைச்சினால் 2025 ஆம்ஆண்டு மார்ச்மாதம் கொண்டாடப்படவுள்ள சர்வதேச மகளிர் தினத்தில் பல்துறைப் பெண் சாதனையாளரைக் கௌரவிக்கும் முகமாக வடக்கு மாகாணத்தில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட பல்துறை சார் பெண் சாதனையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகளிலிருந்து மதிப்பீட்டுக் குழுவினரால் தெரிவு அடிப்படையில் பல்துறை பெண் சாதனையாளர் ஒருவர் மாத்திரம் தெரிவு செய்யப்பட்டு 'நிகரி விருது' எனும் உயர்விருது வழங்கப்படும்.

திறந்த போட்டிகளாக நடைபெறும் இப் போட்டிகளில் பங்குபற்ற ஆர்வமுள்ளவர்கள் மகளிர் விவகார அமைச்சு, வ.மா, இல.04, புரூடி லேன், புங்கன்குளம் சந்தி, அரியாலை, கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரி ஊடாகவோ அல்லது அமைச்சின் மின் அஞ்சல்: npminwa@gmail.com மற்றும் தொலைபேசி இல. 021 222 0883 ஊடாகவோ தொடர்பு கொண்டு போட்டி நுழைவுக்கான விண்ணப்பம் மற்றும் விதிமுறைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

மேலதிக விபரங்களுக்கு https://np.gov.lk/ எனும் வடக்கு மாகாணசபையின் இணையத்தளத்தினைப் பார்வையிட முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6-8)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் பொதுக் கூட்டமும் 2025 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவும் இன்று(09.02.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இணுவில் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஒரு கழகத்திலிருந்து இரண்டு பிரதிநிதிகள் உங்களின் விளையாட்டுக் கழக லெற்றப் பாட்டில் இருவரின் பெயரைக் குறிப்பிட்டு தலைவர், செயலாளர் உறுதிப்படுத்தி, கூட்டத்திற்கு கொண்டு வர வேண்டும்.

அப்போது நீங்கள் கூட்டத்திற்கு அனுமதிக்கப்படுவீர்கள் என சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (6-8)

# மின்சார சட்டதிருத்த கால அவகாசம் நீடிப்பு

(கொழும்பு)

உத்தேச மின்சார சட்ட மூலத்தில் கொண்டுவரப்படும் திருத்தம் தொடர்பாக பொது மக்களின் கருத்துக்களைப் பெறுவதற்கான கால அவகாசம் எதிர்வரும் 14 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதன்படி மக்கள் தங்களது யோசனைகளை இலக்கம் 434, காலி வீதி, கொழும்பு 3 என்ற முகவரியில் அமைந்துள்ள மின்சக்தி அமைச்சுக்கு குறிப்பிட்ட திகதிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ அஞ்சல் மூலம் அனுப்பி வைக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மின்சாரச் சட்டத்தில் திருத்தம் தொடர்பான தகவல்கள் தற்போது முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அவற்றை powermin.gov.lk என்ற இணையதளம் மூலம் பார்வையிட முடியும் எனவும் மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. (6-8)

# சந்தைகளில் நேற்றைய விலை



| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 900 | 800 | 700 | 850-900 | 900 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 170 | 150 | 200 |
| பச்சைமிளகாய் | 1400 | 1300 | 1000 | 1000-1150 | 1000 |
| தக்காளி | 150 | 200 | 200 | 140 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 250 | 200 | 200-220 | 250 |
| கோவா | 350 | 280 | 250 | 240 | 400 |
| கரட் | 450 | 550 | 600 | 530 | 700 |
| பூசணி | 120 | 140 | 150 | 80-100 | 200 |
| புடோல் | 150 | 200 | 200 | 200-220 | 400 |
| வாழைக்காய் | 200 | 150 | 160 | 100-150 | 300 |
| சின்ன வெங்காயம் | 450 | 300 | 500 | 250-350 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 180 | 180 | 150 | 200 |
| பாகற்காய் | 550 | 600 | 500 | 400-500 | 600 |
| வெண்டக்காய் | 350 | 400 | 300 | 250-300 | 600 |
| கருணைக் கிழங்கு | 140 | 160 | 150 | 100-120 | 300 |
| பயற்றங்காய் | 750 | 700 | 700 | 800-900 | 600 |
| லீக்ஸ் | 350 | 350 | 300 | 320 | 400 |
| பீற்றூட் | 300 | 320 | 400 | 300 | 400 |
| கறிமிளகாய் | 1200 | 1000 | 900 | 600-650 | 800 |
| முருங்கைக்காய் | -- | -- | 1500 | 1500 | 2000 |
| போஞ்சி | 400 | 400 | 400 | 350-400 | 500 |
| கத்தரிதம்புள்ள | 750 | 600 | 500 | 600 | 800 |
| கீரை - 1 பிடி | 120 | 120 | 80 | 50-70 | 120 |
| தேசிக்காய் | 200 | 250 | 250 | 150-200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 250 | 220 | 200-250 | 150-220 | 200-250 |
| இராசவள்ளி | 500 | 450 | 500 | 400-500 | 600 |
| வெங்காயப்பூ | 160 | 180 | 230 | 100-130 | 250 |
| முள்ளங்கி | 100 | 120 | 100 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 120 | 100 | 130 | 100 | 80 |
| வல்லாரை | 60 | 70 | 50 | 50 | 100 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | 100 | 200 |

# 1 கிலோ கொக்கைன் கட்டைக்காட்டில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு கடற்கரையில் ஒரு கிலோ கொக்கைன் போதைப்பொருள் கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளது

வடமராட்சி கிழக்கு கடற்பகுதிகளில் இடம்பெறும் சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுப்பதற்காக வெற்றிலைக் கேணி கடற்படையினர் தொடர் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்

இந்த நடவடிக்கையின் ஒரு பகுதியாக நேற்று முன்தினம் வெற்றிலைக் கேணி கடற்படையினர் கட்டைக்காடு கடற்கரைப் பகுதியில் கண்காணிப்பை மேற்கொண்ட வேளை கடற்கரைப் பகுதியில் சிறு பொதியில் இருந்த ஒரு



கிலோ கொக்கைன் போதைப்பொருளை மீட்டுள்ளனர்

மீட்கப்பட்ட போதைப்பொருளை மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக வெற்றிலைக்கேணி கடற்படையினர் மருதங்கேணி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (6-8)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு (2025) வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சு "அனைத்து பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு உரிமைகள்" எனும் கருப்பொருளை முன்னிலைப்படுத்தி (சமத்துவம், அதிகாரமளித்தல், அனைவருக்கும் சம உரிமைகள், அதிகாரம் மற்றும் வாய்ப்புக்களைத் திறக்கக்கூடிய நடவடிக்கை மற்றும் யாரும் பின்தங்காத ஒரு பெண்ணிய எதிர்காலம்) எனும் கருப்பொருளில் குறும்படத்திற்கான திரைக்கதை, குறும்படம், ஆவணப்படம், புகைப்படம் மற்றும் ஓவியப்போட்டிகளை நடத்தவுள்ளது.

திறந்த போட்டிகளாக நடைபெறும் இப் போட்டிகளில் பங்குபற்ற ஆர்வமுள்ளவர்கள் மகளிர் விவகார அமைச்சு, வ.மா, இல.04, புரூடி லேன், புங்கன்குளம் சந்தி, அரியாலை, கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரி ஊடாகவோ அல்லது அமைச்சின் மின் அஞ்சல்: npminwa@gmail.com மற்றும் தொலைபேசி இல. 021 222 0883 ஊடாகவோ தொடர்பு கொண்டு போட்டி நுழைவுக்கான விண்ணப்பம் மற்றும் விதிமுறைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலதிக விபரங்களுக்கு https://np.gov.lk/ எனும் வடக்கு மாகாண சபையின் இணையத்தளத்தினைப்பார் வையிட முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தையிட்டியில் எதிர்வரும்

# 11 ஆம் திகதி எதிர்ப்பு போராட்டம்

## காணி உரிமையாளர்கள் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

**மக்களின் காணியும் நிலங்களும் விகாரைக்குரியதென கூறுவதை ஏற்க முடியாது எனத் தெரிவித்து எதிர்வரும் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை போரட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக தையிட்டி காணி உரிமையாளர்கள் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளனர்.**




யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்திருந்தனர்.

மக்களது காணி நிலங்கள் மக்களுக்கே சொந்தம். அவை மக்களுக்கு வழங்கப்படும் என ஜனாதிபதி அநுர அண்மையில் யாழ்.ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவித்திருந்தார்.

ஆனால் அவர் கூறிய கருத்துக்கு முரணாக தையிட்டி விவகாரம் இருக்கின்றது.

அகில இலங்கை பௌத்த மகாசபை ஒருபடிமேல் சென்று விகாரை கட்டப்பட்ட காணி நிலம் மட்டுமல்ல, அயலில் உள்ள காணியும் நிலங்களும் சுவீகரிக்கப்படும் என இறுமாப்புடன் கூறியுள்ளது.

பாராளுமன்றத்தில் கஜேந்திரகுமார் எம்.பி எமது பிரச்சினையை எடுத்துக்கூறியிருந்தாலும் அவருக்குப் பலமாக ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் கைகொடுத்திருக்கவில்லை. இது வாக்களித்த எமக்கு ஏமாற்றத்தையே கொடுத்தது.

இந்நிலையில் எதிர்வரும் 11 ஆம் திகதி மாலை 4 மணியிலிருந்து மறுநாள் மாலை 6 மணிவரை எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை நாம் முன்னெடுக்கவுள்ளோம்.

காணி உரிமையாளர்களாகிய எமது போராட்டத்துக்கு பாரபட்சமற்ற வகையில் அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்கள், போக்குவரத்து மற்றும் சிற்றூர்தி, முச்சக்கர வண்டி சங்கம் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் ஆதரவை வழங்கி வலுச்சேர்க்குமாறு அழைப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8-33)

# வன்னியிலுள்ள வீதிகளை புனரமைக்க நிதி ஒதுக்குக

## ஆளுநர் அதிகாரிகளுக்கு பணிப்பு



(யாழ்ப்பாணம்)

2025 ஆம் ஆண்டில் வடக்கு மாகாணத்துக்கு வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படவுள்ள நிதிக்கு வடக்கு மாகாணத்தால் முன்மொழியப்படவுள்ள திட்டங்கள் தொடர்பான மீளாய்வு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்றது.

ஒவ்வொரு அமைச்சுக்கள் அதன் கீழான திணைக்களங்களுக்கு ஒதுக்கப்படவுள்ள நிதி விவரங்கள் மற்றும் அந்த நிதியில் முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ள திட்டங்கள் தொடர்பில் ஆளுநருக்கு பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகத்தின் திட்டமிடல் - பணிப்பாளர் கே.சிவசந்திரன் தெரியப்படுத்தினார்.

முன்வைக்கப்பட்ட திட்டங்களை ஒக்டோபர் மாதத்துக்குள் நிறைவேற்றி முடிக்க வேண்டியது அந்தத் திணைக்களத் தலைவர்களின் பொறுப்பு என ஆளுநர் இதன்போது குறிப்பிட்டார்.

மேலும் சில திட்டங்கள் யாழினை மையப்படுத்தி முன்மொழியப்பட்டிருந்த நிலையில், அதை மீளாய்வு செய்து, வன்னிப் பிராந்தியத்துக்கு மாற்றுமாறும் ஆளுநர் யோசனை முன்வைத்தார்.

குறிப்பாக வீதி அபிவிருத்தித் திணைக்களத்தால் யாழில் சில வீதிகளைத் தரமுயர்த்தும் செயற்றிட்டங்கள் முன்வைக்கப்பட்டிருந்த நிலையில் அதை விடுத்து வன்னியிலுள்ள விவசாயிகள் அதிகம் பயன்படுத்தும் வீதிகளைப் புனரமைக்க நிதி ஒதுக்குமாறும் பணித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், ஆளுநரின் செயலாளர் மு.நந்தகோபாலன், பிரதிப் பிரதம செயலாளர் - நிதி எஸ்.குகதாஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர். (6-8)

# உதிரிப்பாகங்களை உடைத்து எறிந்த சாரதி

(குருமன்காடு)

வவுனியாவில் கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தின் கீழ் முச்சக்கர வண்டி சாரதிக்குத் தண்டப்பணம் விதிக்கப்பட்டதால், அதிருப்தியடைந்த முச்சக்கரவண்டி சாரதி தனது வாகனத்தின் மேலதிக பாகங்களைத் தனது காலால் உதைந்து உடைத்து எறிந்த சம்பவம் ஒன்று வவுனியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா வைரவப் புளியங்குளம் பகுதியில் கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தினை வவுனியா போக்குவரத்து பொலிஸார் முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது, அப்பகுதியினூடாக பயணித்த முச்சக்கர வண்டி ஒன்றினை வழிமறித்த பொலிஸார் முச்சக்கர வண்டியில் பொருத்தப்பட்டிருந்த மேலதிக உதிரிப்பாகங்களை அகற்றுமாறு தெரிவித்து தண்டக் குற்றப் பத்திரத்தையும் வழங்கியிருந்தனர்.

இதனால் அதிருப்தி அடைந்த முச்சக்கர வண்டியின் சாரதி பொலிஸாரின் முன்னிலையிலேயே இந்த உதிரிப்பாகங்களைக் காலால் அடித்து உடைத்து ஏனைய பாகங்களைக் கழற்றி வீசியுள்ளார். (6-8-250)

# கால்நடைகளுக்கான மருந்து விலை 10 சதவீதமாக குறைப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்து கால்நடை வைத்திய அலுவலகங்களிலும் கால்நடைகளுக்கான பெரும்பாலான மருந்துகளை அதன் உச்சபட்ச சில்லறை விலையை விட 10 சதவீதம் குறைவாகப் பெற்றுக்கொள்ள முடியும் என வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.வசீகரன் தெரிவித்தார்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் அரச கால்நடை வைத்தியர்கள் வடக்கு மாகாண ஆளுநரைச் சந்தித்து பண்ணையாளர்கள் மருந்துகளை பெறுவதிலுள்ள சிரமங்கள் தொடர்பாக வலியுறுத்தியிருந்தனர்.

இதனைத்தொடர்ந்து இப்பிரச்சினை தொடர்பில் ஆளுநர் மற்றும் பிரதம செயலர் ஆகியோரால் வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கமைய மாகாணப் பணிப்பாளர் அலுவலகத்தால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை ஆளுநரால் அனுமதிக்கப்பட்டதன் அடிப்படையில் விசேட நிதி ஒதுக்கப்பட்டு கால்நடை மருத்துவர்களின் கோரிக்கைப்படி தெரிவு செய்யப்பட்ட அவசியமான மருந்து வகைகள் கொள்வனவு செய்யப்பட்டு சகல கால்நடை வைத்திய அலுவலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதன் மூலம் பண்ணையாளர்களின் மருந்துத் தேவைகளை அலுவலகங்களிலேயே நிவர்த்தி செய்யவும் குறைந்த விலையில் மருந்துகளைப் பெற்றுக்கொள்ளவும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான விலைப் பட்டியல் கால்நடை வைத்திய அதிகாரிகள் பணிமனையில் காட்சிப்படுத்தப்பட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.வசீகரன் தெரிவித்தார். (6-8)

# உயர்தர மாணவன் மீது

## பாடசாலை வளாகத்தில் தாக்குதல்

(குருமன்காடு)

வவுனியா நகரை அண்டிய பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் உயர்தர மாணவன் மீது பாடசாலை வளாகத்தில் வைத்து இளைஞர்கள் தாக்கு தல் நடத்தியதில் மாணவன் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குறித்த பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் உயர்தர மாணவன் ஒருவருக்கும், கீழ் வகுப்பில் கல்வி கற்கும் மாணவன் ஒருவருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

முரண்பாடு நீடித்து வந்த நிலையில், கீழ் வகுப்பு மாணவன் வெளி இளைஞர்களை அழைத்துச் சென்று உயர்தர மாணவன் மீது பாடசாலை வளாகத்தில் வைத்து தாக்குதல் நடத்தியதில் உயர்தர மாணவன் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (6-8-250)

# அரகலய இழப்பீடு சம்பவம் விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

அரகலய போராட்டத்தின் போது தங்களது வீடுகள் சேதமாக்கப்பட்டதாகக் கூறி அரசாங்கத்திடமிருந்து பாரியளவில் இழப்பீட்டை பெற்றுக் கொண்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் என சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

பேராதனை போதனா வைத்தியசாலையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் இழப்பீடுகளைப் பெற்றுக்கொண்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பான தகவல்கள் தற்போது கிடைத்துள்ள நிலையில் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. (6-8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இவ்வுலகை சிறப்பானதாக மாற்றுவதில் நாம் ஒவ்வொருவரும் முக்கிய அங்கம் வகிக்கின்றோம்.
- அறிஞர்

வலம்புரி
TP : 021 222 3378
website : www.valampurii.lk

## மலையக மக்களுக்கு பிரஜாவுரிமை வழங்குதல்

தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் மலையகத் தமிழ் மக்கள் இலங்கையின் முழுமையான பிரஜைகளாக ஆக்கப்படுவர் என பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்தியாரத்ன தெரிவித்துள்ளார்.

மலையகத் தமிழர்கள் தொடர்பில் தனது மனப் பதிவுகளை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அண்மைக்காலமாகத் தெரிவித்து வந்துள்ளார்.

இந்நிலையில் மலையகத் தமிழ் மக்களை இலங்கைத் திருநாட்டின் பிரஜைகளாக ஆக்குகின்ற நடவடிக்கையை தேசிய மக்கள் சக்தி முன்னெடுக்குமென பிரஸ்தாப அமைச்சர் கூறியிருப்பது மன ஆறுதலைத் தருகிறது.

உண்மையில் மலையகத் தமிழ் மக்கள் படுகின்ற துன்ப துயரங்கள் கொஞ்சமல்ல.

நாடற்றவர்கள் என்ற மிக மோசமான நிலையைக் கடந்து அவர்களின் வாழ்விடங்கள், அவர்களுக்கான ஊதியங்கள், இயற்கை அனர்த்தங்களால் அவர்கள் எதிர்கொள்கின்ற ஆபத்துக்கள் என நீண்டதொரு பட்டியலை நாம் முன்வைக்க முடியும்.

உண்மை. அந்நியராட்சியில் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வதற்காக தமிழகத்தில் இருந்து அழைத்து வரப்பட்ட தமிழ் மக்கள் மலையகப் பகுதியில் குடியமர்த்தப்பட்டனர்.

தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வதற்காக அழைத்து வரப்பட்ட இவர்களின் உழைப்பை முதலாளித்துவ வர்க்கம் உறிஞ்சிக் குடித்தது.

இதற்கும் மேலாக, அவர்களை நாடற்றவர்களாகப் பிரகடனம் செய்கின்ற மிகமோசமான அநியாயமும் அவர்களுக்கு இழைக்கப்பட்டது.

அதேநேரம் நாடற்றவர்கள் என்ற கோதாவில் மலையகத் தமிழ் மக்களின் அடிப்படைத் தேவைகளை இந்த நாட்டின் ஆட்சியாளர்கள் எவரும் வழங்க முன்வரவில்லை.

ஆம், சௌமியமூர்த்தி தொண்டமான்; எந்த ஆட்சியிலும் அமைச்சர் பதவியைப் பெற்றிருந்தபோதிலும் மலையகத் தமிழ் மக்களின் அவலங்களைப் போக்குவதில் அவர் கணிசமான வெற்றியை அடைந்தார் எனக் கூறமுடியவில்லை.

எதுவாயினும் அன்றைய சூழ்நிலையில் சௌமியமூர்த்தி தொண்டமானின் அரசியல் நகர்வுகள் அர்த்தமுடையதாக இருந்தன.

ஆயினும் அவரின் மறைவுக்குப் பின்பான அவரின் வாரிசுகளின் அரசியல் என்பது மலையகத் தமிழ் மக்களின் வாழ்வியலில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதாக இருக்கவில்லை.

இஃது ஒருபுறமிருக்க, மலையகத் தமிழ் மக்களின் உரிமைக்காகக் குரல் கொடுப்பதில் எங்கள் தமிழ் அரசியல் தலைவர்களும் கருசனை காட்டவில்லை என்றே கூறவேண்டும்.

இந்நிலையில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் மலையகத் தமிழ் மக்களின் பிரஜாவுரிமை, அவர்களின் குடியிருப்புகள், அவர்களுக்கான ஊதியங்கள் உட்பட அந்த மக்களின் வாழ்வியல் தொடர்பில் கவனம் செலுத்துவது வரவேற்கப்பட வேண்டும்.

ஏனெனில் மண்சரிவு எனும் இயற்கை அனர்த்தத்தால் மலையகத் தமிழ் மக்கள் உயிரிழப்புகளைச் சந்தித்து வருகின்றனர். இந்த அவலம் அவர்களை வதைக்கின்றது.

எனவே பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் கூறிய விடயம் பாராட்டப்பட வேண்டியதுடன் மலையகத் தமிழ் மக்களின் உயிர்ப் பாதுகாப்புக்கும் ஊதியப் பாதுகாப்புக்கும் அரசாங்கத்தால் உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும் என்பது இங்கு குறித்துரைக்கப்பாலது.

## பெரமுன.ஐ.ம.ச கட்சிக்கு சவால் கிடையாது - மத்தும பண்டார

ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன கட்சி தமது அணிக்குச் சவால் கிடையாது எனவும் கூட்டணி அமைப்பது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் மாத்திரமே பேச்சு நடத்தப்பட்டு வருகின்றது எனவும் ஐக்கிய மக்கள் சக்தி யின் பொதுச்செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார். ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அனைவருக்கும் அரசியல் செய்யும் உரிமை இருக்கின்றது. அந்த வகையில் மொட்டுக் கட்சி செயற்படுகின்றது. அவர்களின் நடவடிக்கை எமக்குச் சவால் கிடையாது. ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி இணை வதையே கட்சி ஆதர வாளர்கள் விரும்புகின்றனர். சிலர் எதிர்த்த போதிலும், பெரும்பாலானவர்கள் ஆதரவு நிலைப் பாட்டிலேயே உள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைப் பதவியில் எவ்வித மாற்றமும் வராது. சஜித் பிரேமதாஸவே தலைவர். அவருக்கே மக்கள் ஆதரவு உள்ளது என குறிப்பிட்டுள்ளார். (6-8)

## 7 ஆயிரம் வைத்தியர்கள் வெளியேறத் தீர்மானம்

(கொழும்பு)

இலங்கையில் சுமார் 7,000 வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேற தீர்மானித்துள்ளனர் என்றும் சுமார் 2,000 வைத்தியர்கள் ஏற்கனவே நாட்டை விட்டு வெளியேறி வெளிநாடுகளில் பணியாற்றி வருகின்றனர் எனவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் பிரபாத் சுகததாச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். மேலும் 5,000 வைத்தியர்கள் தங்கள் வெளிநாட்டு கடவுச்சீட்டுக்களை பெற்றுள்ளனர் என்று அவர் குறிப்பிட்டார்.

2025 வரவு-செலவுத் திட்டம் மூலம் வைத்தியர்களுக்கு அவர்களின் உரிமைகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால் நாடு முழுவதும் உள்ள வைத்தியசாலைகளில் 7,000 வைத்தியர்களுக்கு பற்றாக்குறை ஏற்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் வைத்தியர்கள் தங்கியிருப்பதை நீட்டிப்பதன் மூலம் இலவச சுகாதார சேவைகளைப் பெறுவதை நோக்கமாகக் கொண்ட 2025 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்துக்கான முன்மொழிவை அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் சமர்ப்பித்துள்ளது. (6-8)

## ஐ.எம்.எப் இன் 3 ஆவது மதிப்பாய்வுக் கூட்டம் எதிர்வரும் வாரங்களில்

(வோஷிங்டன்)

இலங்கையுடனான நீடிக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் கீழ் இடம்பெற்ற மூன்றாவது மதிப்பாய்வு தொடர்பில் ஆராய்வதற்காகச் சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபைக் கூட்டம் எதிர்வரும் வாரங்களில் நடைபெறும் எனச் சர்வதேச நாணய நிதியத்தின் தொடர்பாடல் திணைக்கள பணிப்பாளர் ஜூலி கோசக் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஊடக சந்திப்பிலே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையுடனான நீடிக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் கீழான மூன்றாவது மதிப்பாய்வு கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்று அதிகாரிகள் மட்ட இணக்கப்பாடும் எட்டப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் நிறைவேற்று சபை ஆராய்ந்து அனுமதியளித்ததன் பின்னர் இலங்கைக்கு மேலும் 333 மில்லியன் டொலர் கடனுதவி வழங்கப்படும் எனச் சர்வதேச நாணய நிதியத்தின் தொடர்பாடல் திணைக்கள பணிப்பாளர் ஜூலி கோசக் தெரிவித்துள்ளார். (6-8)

## அரசியல் அழுத்தங்களை சட்டமா அதிபர் மீது திணிக்க வேண்டாம்

(கொழும்பு)

சட்டமா அதிபரின் பரிந்துரைகள் மீது அரசியல் ரீதியான அழுத்தங்கள் பிரயோகிக்கப்படக்கூடாது என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிற்கு சட்டத்தரணிகள் சங்கம் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

குறித்த கடிதத்தில் சட்ட மா அதிபரின் பரிந்துரைகள் தொடர்பில் அமைச்சரவையோ அரசியல் தலைமைகளோ தலையீடு செய்யக் கூடாது என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு செய்வதன் மூலம் சட்டத்தின் சுயாதீனத் தன்மை சவாலுக்கு உட்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க படுகொலை வழக்கின் மூன்று சந்தேக நபர்களை விடுதலை செய்வது குறித்த சட்ட மா அதிபரின் பரிந்துரையை சவாலுக்கு உட்படுத்தும் வகையில் அரசாங்கம் வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பில் சட்டத் தரணிகள் சங்கம் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

சட்ட மா அதிபர் திணைக்களத்தின் பரிந்துரைகள் குறித்து உச்ச நீதிமன்றம் நடவடிக்கை எடுக்கும் எனவும் இந்த விவகாரத்தில் அமைச்சரவையோ அரசியல் தலைமைகளோ தலையீடு செய்வது சட்டத்தின் நியாயாதிக்கத்தை பாதிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-8)

## வெளிநாட்டு அழுத்தங்களுக்கு மகிந்த அடிபணியவில்லை

### சரத் வீரசேகர தெரிவிப்பு

(கொழும்பு)

மேற்குலகைப் பகைத்துக் கொண்டு தான் மகிந்த போரை முடிப்பதற்கு அரசியல் தலைமைத்துவம் வழங்கினார் என முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

மேற்குலக நாடுகளைப் பகைத்துக் கொண்டுதான் மகிந்த ராஜபக்ச போரை முடிவுக்குக் கொண்டு வந்தார். போர் முடிவடைவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னதாக இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் வந்தனர்.

அமெரிக்காவில் இருந்தும் குழுவொன்று வந்தது. போரை நிறுத்துமாறு மகிந்த ராஜபக்சவிடம் அவர்கள் வலியுறுத் தினர்.

ஏனெனில் பிரபாகரனை உயிருடன் கொண்டு செல்ல முயற்சித்தனர். அவர்களின் கோரிக்கைக்குச் செவிமடுக் காமல் மகிந்த போரை முடிவுக்குக் கொண்டு வந்தார்.

மகிந்த ராஜபக்ச வெளிநாட்டு அழுத்தங்களுக்கு அடி பணியவில்லை. மேற்குலகைப் பகைத்துக் கொண்டு போரை முடிக்க அரசியல் தலைமைத்துவத்தை வழங்கினார்.


அதனால் தான் மகிந்தவுடன் மேற்குலகம் பகையாக உள்ளது. தமிழ்ப் பிரிவினைவாத டயஸ் போராக்களும் அவர் மீது பகை வைத்துள்ளனர். இதனால் மகிந்தவுக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ளது என தெரிவித்துள்ளார். (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைப்பூசம்

## அருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோயில்

## உலகப் பெருமஞ்சத் திருவிழா



காலம் : 11.02.2025 செவ்வாய்க்கிழமை பால்குடப்பவனி
ஆரம்பம் : காலை 6.00 மணி இணுவில் மருதனார்மடம் பல்லப்ப வைரவர் ஆலயம்

### பால்குடப் பவனி

- தைப்பூசத்தினத்தன்று யாழ்.குடா நாட்டின் பல பகுதிகளிலும் இருந்து பெரும் தொகையான பக்தர்கள் ஒன்று சேர்ந்து பால்குடத்தினை எடுத்தல் வருடாவருடம் இடம்பெற்று வருகிறது.
- அடியவர்களின் வசதி கருதி பால், குடம் என்பன ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.
- ஒரு பால்குட பற்றுச்சீட்டு - 400/-
- நாளை திங்கட்கிழமைக்கு முன் ஆலய கரும பீடத்தில் காலை 9.00 - 11.00, மாலை 4.30 - 6.00 மணி வரை பதிவுகளை மேற்கொள்ள முடியும்.
- மாபெரும் பொங்கல் (காலை 09.00 - 2.00 மணிவரை)
- பொங்கல் பொருட்கள் அனைத்தும் ஆலயத்தில் உண்டு. பொங்கல் பானை, அகப்பை, பேசின், அரிசி, சர்க்கரை, நெய், தேன், கயு, விறகு, முந்திரிகை வத்தல், வாழை இலை, பால் என்பன உள்ளன.
- வெண் பொங்கல் பொதி - 1700/-
- சர்க்கரைப் பொங்கல்பொதி - 2700/-

அன்றைய தினம் நண்பகல் பூசை நிறைவுற்றதும் அன்னதான நிகழ்வும் இடம்பெறும்.

இரவு 6.30 மணிக்கு வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து உலகப் பெருமஞ்சத்தில் முருகப் பெருமான் வீதிவலம் வரும் நிகழ்வும் பாரம்பரிய கலை நடன நிகழ்வுகளும் இடம்பெறும்.

முருகன் அடியார்கள் அனைவரும் அன்றைய தினம் காலை - இரவு வரை நடைபெறும் பூசை வழிபாடுகளில் கலந்துகொண்டு எம்பெருமானிடம் இஷ்ட சித்திகளைப் பெற்று உய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(C-2228)

திருவிழா சிறக்க வாழ்த்துவோர்

**சாலினி கிரைன்டிங் மில் அன் இன்ரஸ்ரி**

**கற்பகப் பிள்ளையார் கோவிலடி, உடுவில் கிழக்கு, சுன்னாகம்.**



## நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், அரச, தனியார் துறை, உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பல்லாயிரக் கணக்கில் எம்மிடம் உள்ளனர். மிகப் பொருத்தமான ஜாதகங்கள் உடன் தரப்பட்டு, துரிதமாகத் திருமணம் நிறைவேற்றித் தரப்படும்.

**198, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**
(வன்னி இன் ஹோட்டலுக்கு அருகில்)
**077 138 7596, 071 999 9306**
(3374)

## வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

## வீடு வாடகைக்கு

யாழ். சுண்டிக்குளி றக்கா ஒழுங்கை (Rakka Lane), ஜோன் பொஸ்கோ பாடசாலைக்கு அண்மையில் 4 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :
**076 485 8020**
(3369)

## வகுப்புக்கள் (English medium)

G.C.E O/L
Maths, Science, ICT
G.C.E A/L
Technology stream
(E-Tech, SFT, ICT)
**072 280 4099**
(825)

## காணி விற்பனைக்கு (40 பரப்பு)

வசாவிளான் அச்சுவேலி வீதியில் சீர்திருத்தப் பாடசாலை மற்றும் சித்த ஆயுள்வேத வைத்தியசாலைக்கு செல்லும் காப்பெற் வீதியில் கம்பி வேலியினால் சுற்றி அடைக்கப்பட்ட 3 அறை வீடு வெட்டுக் கிணற்றுடன் கூடிய தோட்டக் காணி விற்பனைக்கு உண்டு.
(3375)
**075 696 6957**

## WIN REPAIR

உங்கள் குளிர்சாதனப்பெட்டி, சலவை இயந்திரம், A/C, Water heater, Oven என்பன பழுதடைந்து விட்டதா?. கவலையை விடுங்கள். உங்கள் இடத்திற்கே நாம் வந்து திருத்தி தருகிறோம். அத்தோடு உங்கள் வீட்டு water pump, wiring, pipe lining, painting என்பனவற்றையும் செய்து தருவோம்.
(3373)

தொடர்புகளுக்கு: **076 834 6136**


# மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 20 - 04 - 1950 | 24 - 01 - 2025 |

## மகேந்திரராஜா நாகேஸ்வரி

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் லண்டனை(UK) வதிவிடமகவும் கொண்ட மகேந்திரராஜா நாகேஸ்வரி அவர்கள் 24.01.2025 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மகேந்திரராஜாவின் அன்பு மனைவியும் யோகராணி(வசந்தி - லண்டன்), காலஞ்சென்ற உதயகுமார்(வசந்தன்), சிவகுமார்(இத்தாலி), அன்பரசி(சுகந்தி - ஜேர்மனி), ராஜ்குமார்(லண்டன்) அவர்களின் பாசமிகு தாயாரும் விக்கினேஸ்வரன், ஜானகி, ராஜேஸ்வரி(சித்தி), கிருபாகரன், அமுதா அவர்களின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற இராசரத்தினம், மகேஸ்வரி, சண்முகநாதன், செல்வராசா, சுதாசிறி, சிறிசுதா, காலஞ்சென்ற சிறிதரன், புஸ்பராணி ஆகியோரின் சகோதரியும் புஸ்பராணி, தளையசிங்கம், சோதியம்பாள், ராஜேஸ்வரி, காலஞ்சென்ற(கமலேந்திரம்) மற்றும் அதிமதுர சிங்கம், மகேஸ்வரன் ஆகியோரின் மைத்துனியும் நிருஜா, சுகன்யா, சன்ஜீவன், சரண்யா, சர்மிளா, கங்கா, காயத்திரி, அபர்ணா, அனுசியா, தர்சிகா, ரஜீவன், தனுஷிகன், தனுஷிகா, கிருபிகா, கீர்த்திகா, ஆர்த்திகா, லெனுஜன் அவர்களின் பேர்த்தியும் அக்ஷரா, ஆரியன், ஆதிரன், சீர்த்திக், டிசான, லியான, சஞ்சயன், டிஸ்சான், றொசான், திஷானி ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் City of London Crematonum, Albersbrook Road, manor park, E12 5DQ இல் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இராமுப்பிள்ளை வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்

(3871)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு - கிழக்கி...

குப் புதிய பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அந்த வகையில் கிழக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபராக பதவி வகித்த அஜித் ரோகண வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை பொலிஸ் விசேட அதிரடிப் படையின் கட்டளை அதிகாரியாகப் பதவி வகித்த வருண ஜெயசுந்தர கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர்களது நியமனங்கள் இம் மாதம் 12ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் என இலங்கைப் பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது. (ந-7)

## கடவுச்சீட்டு...

பாணத்தில் திறப்பதற்கு குடிவரவு குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகள் இணக்கம் வெளியிட்டுள்ளனர்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபாலவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இதற்கான இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

மேலும் புதிய கிளைக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை ஆரம்பிக்கவும் இதன்போது திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன் யாழ்ப்பாண அலுவலகத்தில் 24 மணி நேர சேவைகளை முன்னெடுக்கவும் முடிவுகள் எட்டப்பட்டுள்ளன.

முன்னதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் யாழ்.விஜயத்தின்போது யாழ்ப்பாணத்தில் கடவுச்சீட்டு அலுவலகம் திறக்கப்படும் என ஜனாதிபதி உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## சட்டம்...

தையிட்டி விகாரை உடைக்கப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“விகாரையை உடைக்க வேண்டும் என தான் கூறியமை இனவாதக் கருத்து அல்ல. சட்டம் அனைவருக்கும் பொதுவானது என்ற அடிப்படையில் இதுவே தீர்வு.

தையிட்டிக் காணி விவகாரம் குறித்து எதிர்வரும் பௌர்ணமி நாளன்று தையிட்டிக் காணி உரிமையாளர்கள் முன்னெடுக்கவுள்ள போராட்டத்துக்கு நானும் ஆதரவளிக்கிறேன்” என அவர் தெரிவித்துள்ளார். (ந-7)

## ஜனாதிபதியாக...

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

ஜனாதிபதி வாசஸ்தலம் வேண்டாம் என மறுத்த ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பெலவத்தையில் தொடர்மாடிக் கட்டடமொன்றில் உள்ள ஒரு சொகுசு வீட்டில் வசித்து வருகிறார்.

ரில்வின் சில்வாவின் வீடும் அதே தொடர்மாடிக் கட்டடத்தில்தான் உள்ளது.

ரில்வின் சில்வாவின் காலை உணவின்போது பல முக்கிய முடிவுகள் எட்டப்படுகின்றன என்றும் கம்மன்பில சுட்டிக்காட்டினார்.

முன்னாள் ஜனாதிபதிகளின் காலத்திலும் வீடுகளில் அமைச்சரவை முடிவுகள் எடுக்கப்பட்டதாகத் தெரிவித்த அவர்,

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வீட்டில் அவரின் சகோதரர்களான கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பசில் ராஜபக்ஷ ஆகியோர் இணைந்து நாட்டின் தீர்மானங்களை எடுத்ததை அவர் உதாரணமாகக் காட்டியுள்ளார்.

மேலும், ஒரு நாட்டின் அரசாங்கம் ஒரு கட்சியைச் சார்ந்து இருக்கும் எனவும் இடதுசாரி ஆட்சியுள்ள ஏனைய நாடுகளில் அரசாங்கத்தின் தலைமைப் பொறுப்பு குறித்த கட்சியின் பொதுச் செயலாளரிடமே இருக்கும் எனவும் கம்மன்பில தெரிவித்துள்ளார். (ந-7)

## மாகாண சபைத்...

வுள்ளோமெனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம். ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல் சட்டத்தில் காணப்படும் சிக்கல்களுக்கு தீர்வு காண வேண்டிய பொறுப்பு பாராளுமன்றத்துக்கு உண்டு என்பதை தொடர்ச்சியாக வலியுறுத்தியுள்ளோம்.

தேர்தல் முறைமை தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக்குழுக்களில் கலப்புத் தேர்தல் முறைமை குறித்து பல பரிந்துரைகளை முன்வைத்துள்ளோம். காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தலை வெகு விரைவில் நடத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளோம்.

எதிர் வரும் காலங்களில் அரசியல் கட்சிகளுடன் மாகாண சபைத் தேர்தல்கள் குறித்து பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளோம். மாகாண சபைத் தேர்தல்கள் குறித்து சகல அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

காணப்படும் சட்டச் சிக்கலுக்குத் தீர்வு கண்டு மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்தும் சூழலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கும், பாராளுமன்றத்துக்கும் உண்டு என்றார். (ந-7)

# வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்த உடன் நடவடிக்கை எடுக்குக

## வடக்கு ஆளுநர் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் தென்னை மரங்களில் பரவி வரும் வெள்ளை ஈத் தொற்றை உடனடியாகக் கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் உத்தரவிட்டுள்ளார்.

வடக்கு மாகாண செயலகத்தில் நேற்று இடம்பெற்ற விவசாயம் சம்பந்தமான கூட்டத்திலேயே ஆளுநர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

வெள்ளை ஈத் தொற்று தென்னை மரங்களில் மாத்திரம் அன்றி ஏனைய விவசாயப் பயிர்களில் பரவி வருகின்ற ஆபத்து இருப்பதனால் இதனை உடனடியாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருமாறும் அவர் தனது உத்தரவில் தெரிவித்துள்ளார்.

தெங்குப் பயிர்ச்செய்கையைக் கேள்விக்குறியாக்கும் மரங்களின் வெள்ளை ஈத் தொற்றுத் தொடர்பில் வலம்புரி நாளிதழ் தொடர்ச்சியாகச் சுட்டிக்காட்டி வந்ததோடு வெள்ளை ஈத் தொற்றை கட்டுப்படுத்த ஆவண செய்யுமாறு ஆளுநரிடம் ஆசிரியர் தலையங்கத்தின் ஊடாக வலம்புரி வலியுறுத்தி யிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ந-7)


மஹஜன சம்பத
திகதி 2025.02.08
சீட்டிழுப்பு இலக்கம் 5741
W 4 6 2 1 4 7
அத சம்பத W 2 1 4 7
சீட்டிழுப்பு இலக்கம் 316
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.02.08
சீட்டிழுப்பு இலக்கம் - 1771
K 11 20 33 53 K
65332

மெகா பவர்
திகதி 08/02/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2089
R 04 23 42 68 71

ஜய
திகதி 2025.02.08
சீட்டிழுப்பு இலக்கம் 0009
K 4 9 3 3

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3983
சீட்டிழுப்பு திகதி 08.02.2025
K 03 20 43 54
K
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.02.08
சீட்டிழுப்பு இலக்கம் 1050
கன்னி 09 10 46 57 கன்னி
84588 46

சுபிர வெசனா
உத்தியோகபூர்வ முடிவுகள்
08.02.2025 வெற்றி வாரம் 449
E 6 6 0 5 3 3
77879
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.30,736,652.40
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2715
சீட்டிழுப்பு திகதி 2025.02.08 தினம் சனிக்கிழமை
28 56 62 66 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.84,960,762.40

சனிதா
திகதி 08.02.2025 வெற்றி வாரம் 4876
10 21 41 69 Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,716,166.00
58930

சசிரி
வெற்றி வாரம் 618
சீட்டிழுப்பு திகதி 08.02.2025
சனிக்கிழமை
25 41 49
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4427
சீட்டிழுப்பு திகதி 08.02.2025 தினம் சனிக்கிழமை
17 48 53 57 மிதுனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.10,289,014.40
112870

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
I 35 23 34 39 69
1891
08.02.2025 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.564,643,732.20

அட கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம் : 2541
சீட்டிழுப்பு திகதி : 2025.02.08
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.69,873,224.80
03 24 29 69 Y
434784


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுசுவை உணவுகளிற்கு

Royal

# றோயல் சுத்தமான பசு நெய்



உங்கள் வாழ்வின் இனிய தருணங்களை தரமான றோயல் நெய் கொண்டு தயாரித்த அறுசுவை உணவுகளுடன் கொண்டாடி மகிழுங்கள்.

**ஆய்வுகூடத்தில் தரம் பரிசோதிக்கப்பட்டு பொதியிடப்படுகிறது.**

குறிப்பு :- யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து பாமசிகளிலும் சுப்பர்மார்க்கட்களிலும் பலசரக்கு கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Marketed By:-
சிவா நறுமணப் பூங்கா®
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 2222 567

Packed By:- Royal Industries®

(C-2223)

# விற்பனைக்கு

- யாழ். ஆஸ்பத்திரி வீதியில் HNBக்கும் signal சந்திக்கும் இடையில் 6 கடைகளும்
- யாழ். மின்சார நிலைய வீதியில் நர்மதா நகைக் கடைக்கும் Toppaz கடைக்கும் இடையில் 6 கடைகளும்
- யாழ். கஸ்தூரியார் வீதியில் கபிலா பாட்டாக் கடைக்கும் வின்சர் சந்திக்கும் இடையில் 6 கடைகளும்
- யாழ். ஸ்ரான்லி வீதியில் வெலிங்டன் சந்திக்கும் வின்சர் சந்திக்கும் இடையில் 6 கடைகளும்
- யாழ். பலாலி வீதியில் SVM எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக 5 பரப்புக் காணியும் உடன் விற்பனைக்குண்டு.

(C-2227)

தொடர்பு:0777 232 535

# வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு

நுணாவில் மேற்கு, சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக A9 Road அருகாமையில் வீரபத்திரர் வீதியில் வீட்டுடன் கூடிய 4 ½ பரப்பு காணி விற்பனைக்குண்டு.

076 485 8020
+ 94777 360 995 (WhatsApp)

(3316)

# காணி விற்பனைக்கு

பொஸ்கோ பாடசாலைக்கு முன்பாக சோமசுந்தரம் அவெனியுவில் 3.5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு:076 342 4705

(3342)

# வீட்டுடன் காணி விற்பனைக்கு

கல்வியங்காடு சந்தியிலிருந்து 100m தூரத்தில் றோட்டுக்கரை வீடும் காணியும் (1 பரப்பும் 2 ½ குளியும்) நல்ல தண்ணீர் கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :
077 229 4985

(3343)

# காணி விற்பனைக்கு

தனங்கிளப்பு A32 பிரதான வீதி ஓரமாக 21 பரப்பு வயற்காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு:076 342 4705

(3342)

# பௌதிகவியல் (A/L)
## தனிப்பட்ட / குழு வகுப்புக்கள்

மாணவர்களின் பௌதிகவியல் பாடத்தின் சந்தேகங்களுக்கும் வினாக்களுக்கும் விரிவான விளக்கமளிக்கப்படும்.
Home visit available
தொடர்புகட்கு: ஆ.நித்தியானந்தன் (B sc, Dip - in- Ed)

15, பழம் றோட், கந்தர்மடம்
076 799 9005

(3348)

# காணி விற்பனைக்கு

கல்வியங்காடு, புதிய செம்மணி வீதியில் 2 பரப்புக் காணி (குழாய் கிணற்றுடன்) விற்பனைக்குண்டு.

- கல்வியங்காட்டு சந்தியிலிருந்து 350 மீற்றர்
- நல்லூர் கந்தசுவாமி கோவிலிலிருந்து 1.7 Km

077 185 4870
078 567 0771

(3362)

# வகுப்புக்கள் (6 - O/L)

தரம் 6 தொடக்கம் O/L வரை விஞ்ஞானம், கணித பாடங்கள் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும். தமிழ் / ஆங்கில மொழி மூலம்

தொடர்புகளுக்கு:
077 639 1935

(3346)

# உடனடி வேலை வாய்ப்பு
## நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS


எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

(C-2229)

EUROPE LINK
EDUCATION CONSULTANCY (PVT) LTD.
www.europelinkedu.com

உங்களுடைய எதிர்காலத்தை எங்களுடன் திட்டமிடுங்கள்



வெளிநாட்டில் உயர் கல்வி

UK, USA, CANADA, SCHENGEN, AUSTRALIA மற்றும் ஏனைய நாடுகள்.

USA | Canada | UNITED KINGDOM | AUSTRALIA | SCHENGEN



மேலதிக விபரங்களுக்கு எம்மை நேரடியாக சந்திக்கவும்.

வலம்புரி ஹோட்டல் யாழ்ப்பாணம்

மு.ப 10 மணி முதல் பி.ப 4 மணி வரை

2025 பெப்ரவரி 15, 16

(822)

+94 76 310 3931 +94 76 391 5660 More Information https://europelinkedu.com

# வேலைவாய்ப்பு

No.198, கஸ்தூரியார் வீதியிலுள்ள SB TRAVELS AND TOURS PVT LTD அலுவலகத்திற்கு Air Ticketing அலுவலகத்திற்கு அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது அனுபவமற்றவர்களுக்கு Training கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு :
021 222 8555
077 108 3482

(C-2222)

# காணி விற்பனைக்கு

நெல்லியடி கரவெட்டிக்கு அண்மையில் 5 பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு.

077 636 0782
076 742 4301

(3370)

# கொக்குவிலில் வீட்டுடன் காணி விற்பனைக்கு

கொக்குவில் மேற்குப் பகுதியில் 1 ½ பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. மற்றும் வீடுகள், காணிகள் விற்பதற்கும் வாங்குவதற்கும் நாட வேண்டியது.

## “Easy Real Estate”

076 742 4301, 075 710 9639

(3370)

# Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 224/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 269/= | |
| 1Kg றவை | - 282/= | |
| 1Kg Prima கோதுமை மா | - 159/= | |
| 1Kg சம்பா (உள்நாடு) | - 240/= | |
| 1Kg சிவப்பு கௌப்பி | - 660/= | |
| 1Kg பயறு | - 699/= | |
| 1Kg வெள்ளை உளுந்து | - 760/= | |
| 1Kg கடலை | - 475/= | |
| 10Kg விஜிதா | - 2720/= | |
| 1Kg கீரிச் சம்பா | - 255/= | |
| 1Kg தீட்டல்ப் பச்சை அரிசி | - 250/= | |
| 400g லக்ஸ்பிறே | - 975/= | ~~1050/=~~ |
| 400g நெஸ்டமோல்ட் | - 735/= | ~~780/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 50/= | ~~80/=~~ |

400g Anchor



999/= ~~1050/=~~

1Kg சன்லைட் பவுடர்



340/= ~~380/=~~

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

(824)

Happy Supermarket
0777 8080 30

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.02.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org